விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 13 சனிக்கிழமை (29.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 285

ராம்கோ RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவு 290 பில்.

## அமைச்சரவையில் சமர்ப்பிப்பு

*(கொழும்பு)*, 2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினம் 290 பில்லியன் ரூபாய் (29 ஆயிரம் கோடி) ...துக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மொத்த வருமானம் ...யிரத்து 280 பில்லியன் ரூபாய் எனவும் மொத்த செலவினம் 2 ஆயிரத்து ...20 பில்லியன் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. *(19ஆம் பக்கம் பார்க்க)*

## நீதிமன்ற விடயத்தில் எந்தத் தலையீடுமில்லை



நீதிமன்ற விவகாரங்களில் எவரும் தலையீடு செய்ய அனுமதிக்கப் போவதில்லை எனவும் தானும்தலையிட மாட்டேன் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். *(20ஆம் பக்கம் பார்க்க)*

## பல்கலைக்கழக பேரணிகள் கொழும்பில் நிறைவடைந்தன




(கொழும்பு)

பல்கலைக்கழக சமூகம் கடந்த ஐந்து நாட்களாக முன்னெடுத்து வந்த பேரணிகள் இரண்டும் கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நிறைவடைந்தன.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் சம்மேளனமும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனமும் கண்டி மற்றும் காலி ஆகிய நகரங்களிலிருந்து கடந்த திங்கட்கிழமை இந்தப் பேரணிகளை ஆரம்பித்தன.

மொத்தத் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கை அரசாங்கத்துக்கு பொறுப்புணர்ச்சி தேவை!

### த ஹிந்து தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்படுவதில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று இந்தியாவின் த ஹிந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

த ஹிந்து பத்திரிகையின் நேற்றைய ஆசிரியர் தலையங்கத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் சரியாக செயல்படவில்லை.

இதற்காக நியமிக்கப்பட்ட பல குழுக்கள் எந்த செயற்பாடுகளும் இன்றி கைவிடப்பட்டுள்ளன.

இவ்வாறன நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது அரசாங்கம் முன்வைத்துள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இணைவதற்கும் மறுப்புத் தெரிவித்து வருகின்றது.

அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கத்தின் கடந்தகால போக்குகளை அடிப்படையாகவைத்து பார்க்கும்போது அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கம் பொறுப்புடன் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## தமிழர்களைச் சுட்ட தீ இன்று அரசையே மீளச் சுடுகின்றது!

### உருத்திரகுமாரன் அறிக்கை

ஈழத் தமிழர் தேசத்தின் மீது சிங்களம் மூட்டிய தீ இன்று அவர்களளயே மீளச் சூழத் தொடங்கியுள்ளது.

தமிழரை சிங்களம் சுட்ட தீ இன்று சிங்களத்தை மீளச் சுடுகிறது. சிங்கள அரசின் தலைவர் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ செல்லும் இடமெங்கும் அவரை இத்தீ கலைத்து கலைத்துத் துரத்துகின்றது.

இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஐ.நா. விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக விடுத்த ஊடக அறிக்கையில் உருத்திரகுமாரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்தாவது,

மகிந்த ராஜபக்ஷ தனது ஐக்கிய நாடுகள் சபைக்கான பயணத்தை ரத்துச் செய்ய வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளார்.

தமிழ் மக்களின் எதிர்ப்பினையும் அனைத்துலக அழுத்தங்களையும் ஒன்றுசேர எதிர்கொள்ள வேண்டியிருந்த சூழலிலேயே அவரது பயணம் ரத்துச் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## ஆஸியில் இருந்து நாடு திரும்புவோர் அதிகரிப்பு

(சிட்னி)

புகலிடம் கோரி அவுஸ்திரேலியாவில் தஞ்சம் அடைந்துள்ள இலங்கையர்களில், மீண்டும் நாடு திரும்ப விண்ணப்பித்துள்ளோர் தொகை மேலும் அதிகரித்துள்ளதாக அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் திஸர சமரசிங்க அந்நாட்டுப் பத்திரிகையான நஷனல் ரைம்ஸுக்கு தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 18 இலங்கையர்கள் கடந்த வாரம் நவுறுக்கு அனுப்பப் *(19ஆம் பக்கம் பார்க்க)*

## புலிகள் மீதான தடையை நீக்கக் கோரிக்கை



(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிப்பை எதிர்த்து தீர்ப்பாயம் முன் ஆஜராகி கருத்துத் தெரிவித்துள்ள மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, மேற்படி தடையை நீக்குமாறு கோரிக்கையொன்றையும் முன்வைத்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தத் தடை 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நீட்டிக்கப்பட்டு *(20ஆம் பக்கம் பார்க்க)*

## மனித உரிமைப் பிரச்சினையைத் தீர்க்க உரிய வகையில் அரசு செயற்படவில்லை

### நெருக்கடிகளுக்கான குழு குற்றச்சாட்டு

(ஜெனிவா)

இலங்கையில் மனித உரிமைப் பிரச்சினைகளில் இன்னும் அவ் அரசாங்கம் உரிய வகையில் செயற்படவில்லை என்று நெருக்கடிகளுக்கான குழு குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வு தற்போது நடைபெற்று வருகிறது.

இந்தநிலையில் அதில் பங்கேற்றுள்ள உறுப்பு நாடுகளின் உறுப்பினர்களுக்கு நெருக்கடிகளுக்கான குழு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமர்வில் பிரேரணை நிறைவேற்றப்பட்டு 6 மாதங்கள் கடந்துள்ளன. எனினும் இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளைப் பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை.

சொந்த நாட்டில் தயாரிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை மாத்திரம் வெளியிடப்பட்டுள்ளது. எனினும் அதன் உள்ள விடயங்கள் அமுல் செய்யப்படவில்லை.

இந்நிலையில் *(19ஆம் பக்கம் பார்க்க)*

## மீண்டும் டெசோ மாநாடு அடுத்த வாரம் ஆரம்பம்

எதிர்வரும் ஒக்டோபர் 3-ம் திகதியன்று காலை 10 மணிக்கு மீண்டும் டெசோ மாநாடு நடைபெறும் என அந்த அமைப்பின் தலைவரும் தி.மு.க. தலைவருமான கருணாநிதி அறிவித்துள்ளார்.

தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அந்த அமைப்பின் உறுப்பினர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளதாக அறிவாலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஓகஸ்ட் 12-ம் திகதியன்று டெசோ மாநாடு சென்னையில் நடைபெற்ற நிலையில் மீண்டும் *(20ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட உப தபாலகங்களுக்கு விரைவில் கணனி வலையமைப்பு வசதி

## தேசிய சேமிப்பு வங்கி நடவடிக்கை

யாழ்.மாவட்டத்திலுள்ள உப தபாலகங்களில், தேசிய சேமிப்பு வங்கியின் செயற்பாடுகளை கணனி வலையமைப்பின் ஊடாக மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்திலுள்ள தபாலகங்கள் அனைத்தும் கணனிவலைப் பின்னல் ஊடாக தேசிய சேமிப்பு வங்கி வைப்புகள் மீளபெறுதல், மின்சார பட்டியல் செலுத்தல், இலத்திரனியல், காசுக்கட்டளை போன்ற பல இலத்திரனியல் செயற்பாடுகளை துரிதமாக மேற்கொண்டு வருகின்றன.

இந் நிலையில் கடந்த சில மாதங்களாக தேசிய சேமிப்பு வங்கியின் வைப்புகள் யாழ். மாவட்டத்திலுள்ள உப தபாலகங்களில் அதிகரித்துக் காணப்படுவதால் அவற்றையும் கணனிவலைப் பின்னலூடாக மேற்கொள்வதற்கு தேசிய சேமிப்புவங்கி நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதன் ஆரம்பகட்ட நடவடிக்கையாக வடமாகாண பிரதிஅஞ்சல்மா அதிபரிடம் இவ் ஆலோசனை முன்வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை உபதபாலகங்களை கணனி வலயமைப்பிற்குள் உட்படுத்தும் நடவடிக்கை இந்த வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும் எனவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஏ)

## அறநெறிப்பாடசாலை இன்று ஆரம்பம்

கீரிமலை கூவல் தாமரை தாய்மார் கழகமும், வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனமும் இணைந்து கூவல் சிவானந்தா முன்பள்ளியில் அறநெறிப்பாடசாலையொன்றை இன்று சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பித்து வைக்கின்றனர்.

தாய்மார் கழகத்தலைவி திருமதி ப.வசந்தா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ்.பிராந்திய பாடசாலை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி வை.யோகேஸ்வரன் பிரதமவிருந்தினராக கலந்துகொள்கிறார். (ஏ)

## மண்டைதீவில் இன்று கடையிற்சுவாமிகளின் குருபூசை

மண்டைதீவில் இன்று கடையிற்சுவாமிகளின் 121ஆவது குருபூசை இடம்பெறுகின்றது. மண்டைதீவில் கடையிற்சுவாமிகள் வாழ்ந்த நினைவாலயத்தில் இடம்பெறும் குரு பூசையில், காலை முதல் அபிசேக ஆராதனைகள் இடம்பெற்று மதியம் மகேஸ்வர பூசை இடம்பெறும்.

கடையிற் சுவாமிகள் நீண்டகாலம் வாழ்ந்த மண்டைதீவில் சுவாமிகளின் குரு பூசையை ஆலய அறங்காவலர் ந.சிவசுப்பிரமணியம் தொடர்ச்சியாக செய்துவருவது குறிப்பிடத்தக்கது. (ந)

# அடிதடிச் சம்பவங்கள் யாழில் திடீர் அதிகரிப்பு

## இனங்காட்ட பொலிஸார் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழில் கடந்தவாரம் மட்டும் 44 அடிதடிச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிகுகனேசன் தெரிவித்தார்.

இச்சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழில் தற்போது இவ்வாறான அடிதடி சம்பவங்கள் அதிகரித்திருப்பதனை பொலிஸ் தரப்பு புள்ளிவிபரங்கள் நிரூபித்துள்ளன.

வீதிகளில் சந்திக்குச் சந்தி நிற்கும் இளைஞர்களினாலேயே இவ் அடிதடிச்சம்பவங்கள் இடம்பெறுவதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

சில பாடசாலை மாணவர்கள் கூட இவ்வாறு மோதல்களில் ஈடுபட்டு வருவதாகவும் சிலர் அடிதடி கும்பல்களுடன் இணைந்து குழு மோதல்களில் ஈடுபட்டு வருவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறானவர்களினை பொலிஸாருக்கு இனங்காட்டி தண்டனையினை பெற்றுக் கொடுப்பது சமூகத்தில் அக்கறையுள்ளவர்களின் கடமையாகும். யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடமும் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடமும் இவ்வாறான முறைப்பாடுகள் உட்பட ஏனையபிரச்சினைகளினை வாரம்தோறும் புதன்கிழமைகளில் நேரடியாக முறைப்பாடு செய்ய முடியும் என அவர் தெரிவித்தார். (எ-4)

# முல்லைத்தீவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதியிடம் பொய் கூறிய இருவருக்கு திடீர் இடமாற்றம்!

முல்லைத்தீவிற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்தவின் கோபத்திற்குள்ளான இரு அரச அதிகாரிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையினில் ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பாடசாலைப் பொறியியலாளர் ஆகியோரே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கான விஜயமொன்றை மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்து முள்ளிவாய்க்காலில் படை முகாமொன்றையும் திறந்து வைத்திருந்தார்.

அத்துடன் அரச அதிகாரிகளுக்கு கூட்டமொன்றையும் முல்லைத்தீவினில் நடத்தியிருந்தார். அவ்வேளையினில்குமுழமுனையில் கட்டி அரைகுறையினில் நிற்கும் பாடசாலை கட்டிடம் தொடர்பாக அவர் முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிப்பாளர் மற்றும் பாடசாலைப் பொறியியலாளர் ஆகியோரிடம் கேள்விகளை எழுப்பியிருந்தார்.

அவ்வேளையில் அவர்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடான பதில்களை அளித்தனர் இதனால் சீற்றமுற்ற ஜனாதிபதி பொய்களைக் கூறுவதனாலும் பேசி பொய்களை ஒரேமாதிரி சொல்லப்பழகுங்கள் என்றார்.

நீங்கள் புலிகளிடம் பணியாற்றிய காலமனோ நிலையினில் இருக்கிறீர்கள் எனவும் அவர் குற்றம்சாட்டினார். ஜனாதிபதியின் கோபத்தையடுத்தே குறித்த இரு அதிகாரிகளும் ஆளுநரால் அவசர அவசரமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (எ-11)

## மருத்துவ பீட மாணவன் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியி[illegible] உள்ள வீடொன்றில் தூக்கில் தொங்[illegible] நிலையில் இளைஞரொருவரின் சட[illegible] நேற்று காலை மீட்கப்பட்டுள்ளதாக வவு[illegible] பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பை சொந்த இடமாக கொண்ட தங்கராசா சஞ்சுதன் (வயது 21) என்ற இளைஞனே மின்விசிறியில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் மருத்துவப்பீடத்திற்கு தெரிவாகியிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11,15)

## நிலா முற்றம்

(யாழ்ப்பாணம்)

சமூக மேம்பாட்டுக்கு இளம் சந்ததியை பங்குதாரர் ஆக்குவதில் உள்ள சவால்கள் என்ற தொனிப் பொருளில் நிலா மு[illegible] என்ற நிகழ்வு பேராசிரியர் சிவசந்திரன் [illegible]மையில் இன்று மாலை 5.30 மணிக்கு[illegible] வுண் வீதியிலுள்ள நேசன் பொப்புலர் ரவல்[illegible] அண்ட் ரூரிஸ் மண்டபத்தில் நடைபெறவு[illegible]ளது. இதில் ஆய்வாளர்கள் சமூக வியலாளர்கள் வங்கி முகாமையாளர்கள் மற்றும் பலர் பங்குபற்றவுள்ளனர். (ஏ)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு.வே.நந்தகுமார் அவர்களின்
அன்புத்தந்தை

**ஆறுமுகம் வேலும்மயிலும்**
(ஓய்வு பெற்ற தபால் அதிபர்)
26.09.2012 அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திப்போமாக.

ஊழியர் நலன்புரிச்சங்கம்
மு/வித்தியானந்தா கல்லூரி, முள்ளியவளை

(517)

## விற்பனைக்கு

ISUZU - 350 கூலர் விற்பனைக்கு உண்டு. பதிவிலக்கம் JX-XXXX நீளம் அகலம் உயரம் 6.48 M 2.01 M 3.05 M
மேலதிக தொடர்புகளுக்கு
0776006506

(சி-1177)

## முகாமையாளர் மற்றும் எரிபொருள் நிரப்புனர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.
முகாமையாளர் பதவி:
கல்வித்தகைமை : A/L வர்த்தகம்
தொடர்புகளுக்கு :-
0774667603
0212241466

(சி-1178)

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும்

**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)

எனும் சமூக சேவை அமைப்பில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

- நிர்வாக உத்தியோகத்தர்
  (இருபாலாரும், ஓய்வுபெற்ற அரச/தனியார் உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வயது 45 இற்கு மேல்)
- முகாமைத்துவ உதவியாளர்கள்
  (இருபாலாரும், கணனி அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
  வயது 30 - 45)

பொதுத் தகைமை
சமூக சேவை நோக்கம் கொண்டவராக இருத்தல் மிகவும் அவசியமானதாகும்.
பொருத்தமான தகைமை உடையவர்கள்

விளம்பர இல. சி-1156
மே/பா வலம்புரி
இல. 3, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு தொலைபேசி இலக்கம் உட்பட தமது சுயவிபரம் அடங்கிய விண் ணப்பத்தை அனுப்பி வைக்கவும்.

இயக்குநர் சபை

(C-1156)

YAALH ENGLISH ACADEMY
வழங்கும்
'EASY ENGLISH'
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
விபரங்கள் + பெயர் பதிவு : 773 212 711 மூலம்

செல்லா சினிமா- யாழ்ப்பாணம்




## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கி/கிளி. இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற செல்வன் சந்திரபாலா சிந்துஜன் 158 புள்ளிகளை பெற்றுள்ளார். இவரை சிறப்பாக வழிநடத்திய அதிபர், ஆசிரியர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இவரது கல்விப் பயணம் இன்னும் சிறப்படைய எல்லாம் வல்ல வயலூர் முருகன் துணை எப்போதும் இருக்க வேண்டும் என வாழ்த்துகிறோம்

(514)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கோப்பி குடிக்கலாமா?

ஒருவரை நாம் உபசரிக்க வேண்டுமென்று நினைத்தால், உடனடியாக நாம் செய்வது கோப்பி குடிக்கச் சொல்வதுதான்.

இதனாலே கோப்பி வேண்டுமென்று நினைக்கிறவர்கள் ஒரு கட்டாயத்திற்காக அதைக் குடிக்க வேண்டியிருக்கும்.

கோப்பி அதிகமாக குடிப்பதால் கெடுதல் வரும். அதனால் அதை ஒரு அளவோடு நிறுத்துவதுதான் நல்லது.

நாம் குடிக்கும் கோப்பியிலே காஃபீன்- எனும் நச்சுப் பொருள் இருக்கிறது. இது ஐந்து நிமிடத்திலே உடம்பு பூராகவும் பரவி விடும்.

ஒரு நாளில் 300 தொடக்கம் 350 மில்லி கிராம் காஃபீன் நமது உடம்பினுள் போனால்... அது நம்மைக் கோப்பிப் பழக்கத்திற்கு அடிமையாக்கக் கூடிய அளவுக்குக் கொண்டு வந்து விடும்.

நமக்குத் தெரியாமலே கோப்பிப் பழக்கத்திற்கு நாம் அடிமையாகி இருப்போம். அதை எப்படி கண்டு பிடிக்கலாம்?

இரண்டு, மூன்று நாட்களுக்கு நாம் கோப்பி குடிக்கும் பழக்கத்தை நிறுத்த வேண்டும். என்ன நடைபெறுகிறது- அதாவது என்ன விடை கிடைக்கப் பெறுகிறது என்பதை ஆராய வேண்டும்.

அந்தச் சமயத்திலே உங்களுக்கு எரிச்சல் வருகிறதா? கொட்டாவி ஏற்படுகிறதா? தூக்கம் அல்லது மயக்கம் ஏற்படுகிறதா? தலைவலி ஏற்படுகிறதா? அடிக்கடி உணர்ச்சி வசப்படுகிறீர்களா? கோபத்தை அடக்க முடியவில்லையா? இவை அனைத்தும் இருந்தால் அநேகமாக நீங்கள் காஃபீனுக்கு அடிமையாகி இருப்பீர்கள்.

தூங்கும் போது உங்களுக்கு சிரமம் இருக்கிறதா? தலைவலியோ உடல் நடுக்கமோ இருக்கிறதா? உடனடியாக கோப்பி குடிப்பதை குறைத்துக் கொள்வது நல்லது. பின்னர் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு வரலாம்.

தலைவலித்தால் கோப்பி குடிப்பதற்குப் பதிலாக அதை நிறுத்திக் கொள்வது நல்லது. கோப்பி குடிக்கிற பழக்கமே அடிக்கடி தலைவலி வருவதற்கான காரணம் என்று ஆராய்ச்சி முடிவுகள் சொல்கிறது.

வயிற்றுப் புண் உள்ளவர்கள் கோப்பி குடிப்பதை நிறுத்துவது தான் சாலச் சிறந்ததாகும்.

ஒரு சிலரது நடத்தை கோளாறுகளுக்கும்; அளவு மீறிய செயற்பாடுகளுக்கும் காஃபீன் காரணமாக அமைவதாக கூறப்படுகிறது. இருந்தாலும் அது நிரூபிக்கப்படவில்லை.

தேவைக்கு அதிகமாக அல்லது அநாவசியமாக குடிக்கும் கோப்பியைக் குறைப்பது நல்லது. அது நல்லது. அதற்காகத்தான் இந்தத் தகவல் கூறப்படுகிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சம்பள உயர்வு வழங்கப்படாது; விரைவில் கடமைக்கு திரும்புங்கள்

## பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது. எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைக்குள் தமது பணிக்கு விரிவுரையாளர்கள் திரும்ப வேண்டும். இல்லையேல் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டாது என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கென குவைத் அரசாங்கத்தின் 65 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் கட்டப்பட்ட இணை மருத்துவ விஞ்ஞான அலகுக்கான மூன்று மாடிக்கட்டடத் தொகுதி திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், விரிவுரையாளர்களின் பணி நிலைக்கு ஏற்ப கொடுப்பனவுகள் அதிகரித்து வழங்கப்பட்டுள்ளன.

ஒரு உயர் நீதிமன்ற நீதிபதிக்கு வழங்கப்படும் கொடுப்பனவைவிட விரிவுரையாளருக்கு அதிகமாக கொடுக்க முடியாது. ஆனால், விரிவுரையாளர்கள் கோரிக்கைவிடுவதன் படி சம்பளம் உயர்த்தப்பட்டால் நீதிபதியின் சம்பளத்தைவிட அதிகரித்து விடும்.

மேலும் விரிவுரையாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக அரசாங்கம் எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை. எனவே, அது தொடர்பாக நான் எதுவும் பேச விரும்பவில்லை.

இருப்பினும் எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைக்குள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள விரிவுரையாளர்கள் பணிக்குத் திரும்பாவிட்டால் அவர்களின் சேவைக் காலத்திற்கான மேலதிக கொடுப்பனவுகள் கொடுக்கப்படமாட்டாது. 65 மில்லியன் ரூபா செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள இந்த மூன்று மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் கடந்த 2010 ஆண்டு ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி நாட்டப்பட்டு சரியாக இரண்டு வருடங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

இலங்கையில் உள்ள ஒரு சில பல்கலைக்கழகங்களில் இங்கு காணப்படுவது போன்ற விஞ்ஞான மற்றும் மருத்துவ பகுதிகள் இணைந்து காணப்பட்டாலும் அங்கு எல்லாம் எப்போதும் ஒரு பிரச்சினை காணப்படுவதாகவும் ஆனால் இங்கு மட்டுமே எந்தஒரு பிரச்சினையும் ஏற்படாது மிகவும் சிறந்த முறையில் மாணவர்கள் தங்களது கல்வியில் தமது கவனத்தை செலுத்துவது காணக்கூடியதாக இருப்பதாகவும் இது வரவேற்கத்தக்கது எனவும் குறிப்பிட்டார்.

கட்டடத்திறப்பு விழாவில் உயர்கல்வி அமைச்சின் பிரதி அமைச்சர் நந்தமித்திர ஏக்கநாயக்க, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம், மருத்துவ பீட பீடாதிபதி வைத்தியர் பாலகுமார் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 70 | 70 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 60 |
| தக்காளி | 40 | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 90 | 80 | 110 |
| பூசணி | 40 | 30 | 50 |
| புடோல் | 45 | 40 | 50 |
| வாழைக்காய் | 45 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 50 | 60 |
| பாகற்காய் | 90 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 45 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 65 | 60 | 80 |
| பயற்றங்காய் | 70 | 100 | 70 |
| லீக்ஸ் | 90 | 80 | 90 |
| பீற்றூட் | 45 | 60 | 60 |
| கறிமிளகாய் | 90 | 60 | 120 |
| முருங்கைக்காய் | 45 | 40 | 40 |
| போஞ்சி | 70 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 90 | 100 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 250 | 280 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 27-30 |

# இராசி பலன்

*29.09.2012*
*(புரட்டாதி 13, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*
*சதுர்த்தி முற்பகல் 8.46 மணிவரை*
*பூரட்டாதி பிற்பகல் 3.12 மணிவரை*
*இராகுகாலம் 9.02-10.32 மணிவரை*
*சுபநேரம் 3.02-4.32 மணிவரை*
*கடையிற்சுவாமிகள் குருபூசை, வல்லிபுர ஆழ்வார் கடல் தீர்த்தம், பூரணை விரதம்.*

**மேடம்** செய்தொழிலில் புதிய மாற்றங்கள் செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**இடபம்** புதிய நண்பர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உயரும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், வழிபாட்டால் சந்தோசம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம், தொட்ட காரியங்கள் எளிதில் வெற்றி பெறும், போசன சுகமுண்டு, மனதில் உற்சாகமான சிந்தனைகள் உதயமாகும், தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**கடகம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**சிங்கம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்,வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இடம்பெறலாம், வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்ச்சி அவசியம், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கன்னி** பெண்களின் சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், நட்பு வட்டம் விரிவடையும், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தன்னம்பிக்கையோடு செயற்பட்டு காரியம் சாதிப்பீர்கள்.

**துலாம்** வியாபார நன்மை கருதி புதிய வழியைக் கையாள்வீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும், சுவாரஸ்யமான சிந்தனைகள் தோன்றும்.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்துக்களால் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், தொழில் வளர்ச்சி மேலோங்கும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே கைகூடும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், சகோதர வழியில் ஒத்துழைப்புகள் அதிகரிக்கும், பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு பலன் பெற வேண்டிய நாள்.

**கும்பம்** எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், உயரதிகாரிகளின் மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**மீனம்** தெய்வ வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வாரத்தில் 10 திருட்டு சம்பவங்கள்

## ஒரு திருட்டே பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம் பெற்ற 10 திருட்டுச் சம்பவ ங்களில் 9 இலட்சத்து 68 ஆயிர த்து 250 ரூபா பெறுமதியான பொருள், பணம் என்பன திருடப்பட்டுள்ள தாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீ குகணேசன் தெரி வித்தார்.

இவற்றில் 6 சம்பவங்கள் கடைகளை உடைத்தும் 3 வீடுகளை உடைத்தும் வீதியில் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி சுண்டுக் குழியில் உள்ள கடையொன்றில் 17 ஆயிரத்து 205 ரூபா பணம் மற்றும் பொருட்கள் என்பனவும் 21 ஆம் திகதி றக்கா வீதியிலுள்ள கடையொன்றில் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களும் 25 ஆம் திகதி சுதுமலை கிழக்கு சாவற்காட்டிலுள்ள பித்தளைக் கடையொன்றில் 4 ஆயிரம் பெறுமதியான பித்தளைகளும் சாவகச்சேரியில் உள்ள கடையொன்றில் 12 ஆயிரம் ரூபா பணமும் 23 ஆம் திகதி சாவகச் சேரியில் பெயின்ற் கடையில் 4 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பெயின்ட் ரின்களும் 19 ஆம் திகதி நெல்லியடி கிழக்கிலுள்ள கடை யொன்றில் 50 ஆயிரம் ரூபா பணமும் கடைகள் உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளன.

வீடுடைப்புச் சம்பவங்களாக கட ந்த 21 ஆம் திகதியன்று சோடார் கம்பனி வீதி மல்லாகத்திலுள்ள வீடொன்றில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பணம் மற்றும் 3 இலட்சம் பெறுமதியான நகைகள் என்பனவும் சுன்னாகத்திலுள்ள வீடொன்றில் 2 இலட்சத்து 27 ஆயிரத்து 500 ரூபா பணம் என்பனவும் 24-ம் திகதி கைதடி தொழிற் பயிற்சி நிலையத்தில் கணனி உதிரிப்பாகங் களும் திருடப்பட்டுள்ளன.

இவற்றினை விட மானிப்பாய் வைத்திய சாலை வீதியில் நடந்து சென்ற பெண்ணின் கழுத்திலிருந்த 55 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந் தவர்களினால் அறுக்கப்பட்டுள்ளது.

10 திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ள போதிலும் சாவகச்சே ரியில் கடந்த 23 ஆம் திகதி இடம் பெற்ற கடை உடைப்பு சம்பவத்தின் குற்றவாளிகளான இருவரையே பொலிஸார் கைது செய்துள்ளதோடு திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

ஏனைய 9 திருட்டுக்களின் சூத்திரதாரிகள் இதுவரை பொலிஸாரினால் கைது செய்யப்படவில்லை. (அ-4)




நன்றி: மிரர்

# யாழ்.கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய (தரம் 1 ஏபி) அதிபர் பதவிக்கு வெற்றிடமாகவுள்ளது. யாழ்ப்பாணம் கல்வி வலய பாடசாலைகளில் பணிபுரியும் அதிபர் சேவை உத்தியோகத்தரிடம் இருந்தும் ஆசிரியர் சேவை வகுப்பு I, வகுப்பு2-I ஆகியோரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதிபர் சேவை உத்தியோகத்தரிடம் இருந்து விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து மாத்திரமே ஆசிரியர்களது விண் ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவர்கள் அலுவலகத்தில் படிவங்களைப் பெற்று ஒக்டோபர் 5-ம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா கேட்டுள்ளார். (அ)

# ஆட்டோ விபத்து குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோவும் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இதில் குருநகரினைச் சேர்ந்தவரும் 4 பிள்ளைகளின்தந்தையானசெபஸ்ரியாம்பிள்ளை வெனிபேர்ட் றூபன் (வயது 32) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார். (எ-4)




# முஸ்லிம் மதத்தை இழிவுபடுத்திய திரைப்படத்திற்கு கண்டனம்

## யாழ்.மாநகர சபையில் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

முகம்மது நபியை இழிவுபடுத்தி அமெரிக்காவில் வெளியிடப்பட்ட திரைப்பட காணொளிக்கு யாழ். மாநகர சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த வருடத்திற்கான 9 ஆவது மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் சபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின் போது யாழ். மாநகர சபையின் முஸ்லிம் உறுப்பினரான எம்.எம்.முஸ்தப்பாவினால் மேற்படி கண்டனப் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

அந்தப்பிரேரணையில், எமதுமதத்தை இழிவுபடுத்தும் வகையில் அமெரிக்காவினால் வெளியிடப்பட்டுள்ள திரைப்பட காணொளியை யாழ். மாநகர சபையின் முஸ்லிம் உறுப்பினர்கள் வன்மையாக கண்டிப்பதோடு மாநகர சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் க.விந்தன் ஒரு மதம் சார்ந்தவர்களின் தெய்வத்தை இழிவுபடுத்ததும் வகையில் வெளியிடப்பட்ட திரைப்படத்தை நாமும் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இந்தக்கண்டனப் பிரேரணையை கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். இதனையடுத்து அமெரிக்காவில் வெளியிடப்பட்ட திரைப்படத்திற்கு எதிராக கண்டனத் தீர்மானம் உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப் பட்டது. (அ-6)

# தெய்வீக பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சைவத்தமிழ் பண்பாட்டு கழகத்தின் ஆதரவில் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான தெய்வீக பேருரைகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் இன்று சனிக்கிழமை புரட்டாதிச் சனி வார உற்சவத்திற்காக **குருஷேத்திர போர் காட்டும் வாழ்வியல்** நெறி தலைப்பில் சைவப்புலவர் நித்தியானந்தனும் நாளை ஞாயிற்றுக்கிழமை யோக நிஷ்டை உற்சவத்திற்காக **இராவணனுடைய சிவபக்தி** தலைப்பில் சைவப்புலவர் கந்த சத்தியதாசனும் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆஞ்சநேயர் பொங்கல் உற்சவத்திற்காக **இராமனின் நட்பு** தலைப்பில் பரா சதீஸ் ஆகியோரும் பேருரையாற்றவுள்ளனர். இவ்வுரைகள் தினமும் பிற்பகல் 7.30 மணிக்கு ஆரம்பமாகும் என ஆலயச் செயலாளர் ப.ஜெயகிருஸ்ணா அறிவித்துள்ளார். (அ)

# பக்திப்பாடல் வெளியீடு

(யாழ்ப் பாணம்)

மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரத்தில் உள்ள ஸ்ரீ ஞான துர்க்கை அம்மன் ஆலய பக்திப் பாடல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஸ்ரீ ஞான துர்க்கை ஆலய முன்றலில் சமூக சேவகி ச.கல்ப்பனா தலைமையில் நடைபெற வுள்ளது.


இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சி.அலென்ரின் ஆகியோரும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சு.அருமைநாயகம், யாழ்.மாநகரசபை முதல்வர் யோ.பற்குணராசா, நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வடமாகாண சின்மயா மிஷன் ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள், கிளிநொச்சி மாவட்ட மேலதி அரசாங்க அதிபர் செ.ஸ்ரீனிவாசன், தென்மராட்சி பிரதேச செயலாளர் அ.சாந்தசீலன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் முதற்பிரதியை காரைநகர் சமூக சேவையாளர் த.சிவானந்தராஜா பெற்றுக், கொள்ளவுள்ளார். (அ)

# திருநாள் திருப்பலி

யாழ்.போதனா வைத்தியசாலை தூய வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையின் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வழிபாடுகள் மாலை 4.30 மணிக்கு திருசெபமாலையுடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் இன்று சனிக்கிழமை திருப்பலி நிறைவுற்றதும் குணமாக்கல் வழிபாடு இடம்பெறும்.

நாளைய தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். எனவே, பக்த அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெறுமாறு கேட்கப்படுகின்றனர். (அ-2)



வடமராட்சி வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று காலை 9 மணிக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ இடம்பெற்றது. இதில் வல்லிபுர ஆழ்வார் சுவாமி தேரில் பவனி வருவதையும் பக்தர்கள் அங்க பிரதிஷ்டை செய்வதையும் தூக்குக் காவடியையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை செல்லாத 9 மாணவர்கள் இனங்காணப்பட்டனர்

(நல்லூர்)

வலி கிழக்கு கோப்பாய் பிரதேசத்தில், ஊரெழு கிராம சேவையாளர் பிரிவில் பாடசாலைக்குச் செல்லாது வீடுகளில் தங்கி நிற்கும் மாணவர்களைக் கண்டுபிடித்து பாடசாலையில் இணைக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

ஊரெழு கிராம சேவையாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நடவடிக்கையில் பட்டதாரி பயிலுநர்கள், கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து செயற்பட்டதன் காரணமாக நேற்றைய தினம் 9 மாணவர்கள் இனங்காணப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து 9 மாணவர்களையும் பாடசாலையில் இணைத்து கல்வியை தொடர்வதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-2-134)

# ஆஸி.செல்ல முற்பட்ட 77 பேர் கைதாகினர்

## 61 பேர் தமிழர்கள்

அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாக செல்ல முயன்ற 77 பேரை கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்துள்ளதாக கடற்படையின் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

நிர்மணி என்ற படகுமூலம் பயணிக்க முயன்ற இந்த 77 பேரில் 61 தமிழர்கள், 14 சிங்களவர்கள், இரு முஸ்லிம்கள் அடங்குவதோடு பெண்ணொருவரும் அவரது கைக் குழந்தையும் இக்குழுவில் அடங்குவதாக கடற்படையின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, புத்தளம், கொழும்பு, உடப்பு, மன்னார், சிலாபம் மற்றும் கற்பிட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இவர்கள் மோதர துறைமுகத்திற்கு அழைத்துவரப்பட்டு பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப் பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (அ-2)

Cambridge Management College

வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு French, Doutch, ஆகிய மொழிகளில் இலகுவாகப் பேச, எழுத, வாசிக்க, கற்பிக்கப் படுகின்றன.


மற்றும் IELTS, English, IT, Sinhala கற்க விரும்புவர்களுக்கான பிரதியேக வகுப்புகளும் நடைபெறுகின்றன.

6-13 வயது வரையான சிறுவர் சிறுமியர்களுக்கு ICT, English வகுப்புகளும் நடைபெறுகின்றன.

Cambridge Management College
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், (கச்சேரி பஸ்நிலையம் அருகில்)
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com

# நைஜீரியாவில் வெள்ளப்பெருக்கு; 10 ஆயிரம் பேர் வீடுகளை இழந்தனர்

## வெள்ளத்தில் அள்ளுண்டு 140 பேர் பலி



நைஜீரியாவில் கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவுக்கு கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வீடிழந்துள்ளனர்.

மத்திய நைஜீரியாவில் கடந்த ஒரு வாரமாக பெய்த கன மழையால் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பலர் தங்கள் வீடுகளை இழந்து கூரையில் அமர்ந்து நிவாரணத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

மேலும் கடந்த ஜுலை மாதத்திலிருந்து இதுவரை 140 பேர் வெள்ளத்தால் பலியாகியுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்காக பல்வேறு முகாம்களை ஏற்பாடு செய்துள்ள மீட்புக்குழுவினர் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்பதற்காக படகு சேவையை அதிகப்படுத்தியுள்ளனர்.

போதிய உணவு மற்றும் இருப்பிட வசதியின்றி தவித்து வரும் பெரும்பாலான மக்களை மீட்பதற்கான முயற்சியில் தனியார் இயக்கங்களும் ஈடுபட்டுள்ளன. (அ-2)

# புராதன பொருட்களை கடத்த முற்பட்டவர்கள் கைது

புராதன பொருட்களை சட்டவிரோதமான முறையில் இந்தியாவிற்கு எடுத்துச் செல்ல முற்பட்ட ஐவர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப் பட்டுள்ளனர். இவ்வாறான மூன்று சந்தர்ப்பங்களில் புராதன பொருட்களை கடத்துவதற்கு இவர்கள் திட்டமிட்டுள்ளனர். விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்ட பரி சோதனை நடவடிக் கைகளின் போது இவர்களிடம் இரு ந்து புராதன நாண யங்கள் கைப் பற்றப் பட்டுள்ளன.

இந் நாணயங் கள் தொல்பொருள் முக்கியத்துவம் மிக்கவை என நாண யங்களை பரி சோதித்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர் பான விசாரணைகளை விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (அ-2)

JAFFNA ASSOCIATION FOR THE VISUALLY HANDICAPPED
KAITHADI-SRI LANKA
யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம்- கைதடி

வெள்ளைப்பிரம்பு தினத்திற்கு அனுசரணை கோரல்

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின விழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஒக்டோபர் 2012 நடத்தப்படவுள்ளது. அன்றையதினம் பார்வை யற்ற அங்கத்தவர்களை கௌரவித்து அன்பளிப்பு பொருட்களை வழங்கவுள்ளோம். இதற்கான அனுசரணையினை நண்பர்கள், நலன் விரும்பிகள், வர்த்தகப் பெருமக்களிடமிருந்து யாழ்.விழிப் புலனற்றோர் சங்கம் நாடி நிற்கின்றது.

தொடர்புகளுக்கு:-
28, கோயில் வீதி,
1 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல:- 021 2227336
செயலாளர். (இ)

குறைந்த கட்டணத்திலான பொதிகள் சேவைகள்

உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு உணவு, உடை, அலங்காரப் பொருட்கள், ஆவணங்கள், கடிதங்கள், CD ஆகியவற்றை அனுப்பலாம்.

சுவிஸ் - 1kg - 600/-
கனடா - 1kg - 700/-
லண்டன் - 1kg - 600/-
5 நாட்களில் ஒப்படைக்கப்படும். 3 கிலோவுக்கு மேல் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

அவுஸ்திரேலியா - 1kg - 1000/-
ஜேர்மனி - 1kg - 1000/-
5 கிலோவிற்கு மேல் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

அத்துடன் ஏனைய ஐரோப்பிய மத்திய கிழக்கு நாடுகள், இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கும் குறைந்த கட்டணத்தில் எமது சேவைகளை பெற்றுக் கொள்ளலாம்.
வாடிக்கையாளரின் நன்மைகருதி உங்கள் பிரதேசங்களில் உங்களிடம் நன்மதிப்பை பெற்ற பின்வரும் வியாபார ஸ்தாபனங்களில் உங்கள் பொதிகளை ஒப்படைக்கலாம்.

நெல்லியடி - மருதம் கொம்னிக்கேசன் 0212263210
அச்சுவேலி - லிபேட்டி கொம்னிக்கேசன் 0217451245
பருத்தித்துறை - LANDMARK புத்தகசாலை 0750389869
வல்வெட்டித்துறை - V2 TRAVELS and TOURS 0212055044
கோண்டாவில் - பாரதி கொம் - 0212225148
உரும்பிராய் - அருள்விநாயகர் கொம்னிக்கேசன் 0212230623
சுன்னாகம் - TECH ELECTRONICS - 0214916263
சங்கானை - திருமகள் தொலைத்தொடர்பு - 0212250061
பண்டத்தரிப்பு - Funcity - 0217429390
வேலணை - SKR கொம்னிக்கேசன் - 0217390360
சாவகச்சேரி - S.நிலமறங்கன் - 0212270231
ஆனைக்கோட்டை - புவன மல்ரி சென்ரர் - 0779194171

மேற்தறிப்பிட்ட ஸ்தாபனங்கள் எமது ஸ்தாபனத்துடன் இணைந்து இவ் சேவையை செய்கின்றன. உங்கள் பொதிகளை அவர்களிடமும் ஒப்படைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(சீ/1106)

RAINBOW TRAVELS
இல.30/2. 3 ஆம் ஒழுங்கை, மின்சார நிலையம் வீதி, யாழ்ப்பாணம்.
Tel:-0212219596

## மரண தண்டனை பட்டியலில் அசாஞ்சே

அமெரிக்காவின் மரண தண்டனை பட்டியலில் விக்கிலீக்ஸ் இணையத்தள நிறுவுநர் ஜீலியன் அசாஞ்சேயையும் இணைத்துள்ளதாக அவுஸ்திரேலிய பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளின் இராணுவ இரகசியங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர் ஜுலியன் அசாஞ்சே.


அவர் கருத்து வெளியிடுகையில்,

விக்கிலீக்ஸ் மீதான விசாரணையை அமெரிக்கா தளர்த்த வேண்டும். பழிவாங்கும் நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்றார்.

இந்நிலையில் அமெரிக்க இராணுவம் அசாஞ் சேயை எதிரியாக அறிவித்துள்ளதாக அவுஸ்திரேலிய பத்திரிகை யொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

யாழ் மண்ணில்....
கல்யாணமாலை
KALYANAMALAI
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
(பழைய எக்ஸ்போ எயார் விமான சேவை அலுவலகம்)
எனும் முகவரியில் இயங்குகின்றது
தொடர்பு:- 021 720 1005
பதிவுக்கட்டணம் ரூ.1000/- மட்டுமே
குறிப்பு:- பதிவை மேற்கொள்ளும் போது சாதகம், போட்டோ என்பன அவசியம்.
திருமணத் தரகர்கள் பதிவு செய்ய முடியாது.
E-mail:-kalyanamalai.jaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கென குவைத் அரசின் 65 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட இணை மருத்தவ விஞ்ஞான அலகுக்கான மூன்ற மாடிக் கட்டடத்தொகுதி நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கட்டடத் தொகுதியினை உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க திறந்து வைப்பதையும் உயர்கல்வி அமைச்சின் பிரதி அமைச்சர் நந்திமித்திர ஏக்கநாயக்க மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச்செய்தியாளர்)

# இங்கு வாழ்வதற்கு அடிப்படை வசதிகள் எவையும் இல்லை

## சூரிபுரம் மக்கள் கதறல்

(பூந்தோட்டம்)

**எமது சொந்தக் காணிகளை இழந்த நாம் இன்று பல இன்னல்களுக்கு மத்தியில் யாரோ ஒருவரின் தனியார் காணியில் குடியமர்த்தப்பட்டுள்ளோம். இங்கு வாழ்வதற்கான எவ்வித அடிப்படை வசதிகளும் எமக்கு செய்து தரப்படவில்லை. எங்களுடைய சொந்த வளமான காணிகளை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுங்கள் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினரிடம் சூரிபுரத்தில் குடியேற்றப்பட்டுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

சூரிபுரம் தனியார் காணியொன்றில் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள கேப்பாபிலவு மற்றும் சூரிபுரம் மக்களை நேற்று முன்தினம் சந்தித்த வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கத்திடமே அவர்கள் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்துள் ளனர்.

அவர்கள் விடுத்த கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

மூன்று வருடங்களக்கு மேலாக நாம் முகாம்களில் இருந்து பெரும் இன்னல்களை சந்தித்தோம். எனினும் எமது சொந்த இடத்திற்கு சென்று ஏதோ ஒரு தொழிலை செய்து வாழலாம் என்ற நம்பிக்கையிலேயே காலத்தை கடத்தி வந்தோம். ஆனால், இன்று எமது சொந்த நிலமும் இன்றி சொந்தங்களும் இன்றி நட்டாற்றில் விடப்பட்ட நிலையில் வாழ்கின்றோம்.

குடிப்பதற்கும் மலசலகூடத்திற்கும் ஒரே தண்ணீரைப் பயன்படுத்தும் நிலையில் வாழ்கின்றோம்.

நாங்கள் இன்று வளமான காணிகளை விட்டு பொறியியலாளர் மற்றும் நொத்தாரிசு ஆகிய பதவிகளை வகித்தவர்களது காணிகளில் தான் நாம் தற்போது குடியேற்றப்பட்டுள்ளோம். இந்தக் காணிகள் எமக்கு சொந்தமாக தந்தார்களா அல்லது எந்த அடிப்படையில் தந்தார்கள் என்பது தொடர்பில் எமக்கு எதுவும் தெரியாது. அதனை கூறினாலாவது நாம் ஏதாவது வயிற்றுப் பிழைப்புக்காவது பயிர்களை வைத்து பராமரிக்க முடியும். இல்லாவிட்டால் மீண்டும் இடம்பெயர வைப்பார்களா என்று தெரியாமல் எதனையும் செய்ய முடியாது தவிக்கின்றோம்.

மழை காலமாக உள்ளதால் தினமும் நாம் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றோம். கொட்டகைகளை போடுவதற்கு முகாம்களில் இருந்து கொண்டுவந்த தகரங்களையும் தடி, கம்பு களையும் பயன்படுத்துகின்றோம். அவையும் பழுதடைந்தவையாகவும் சேதமடைந்தவையாகவும் உள்ளது. மழை பெய்தால் மழை நீர் கொட்டகைகளுக்குள் வருகின்றது.

நாம் இருக்கும் இடத்திலேயே தேவையான மரம், தடிகளை வெட்டுமாறு பணிக்கின்றனர். அதற்கு போதுமான மரங்கள் காணப்படவில்லை. இதனால் கொட்டகைகளை கூட சரியான முறையில் போட முடியாதுள்ளோம்.

அதுமட்டுமல்ல விதவைகள், ஊனமுற்றவர்களுக்கு கொட்டகைபோட முடியாது தவிக்கின்றனர். மின்சாரமின்மை எமக்கு பாரிய பிரச்சினையாகவுள்ளது. தினமும் இராணுவத்தினர், புலனாய்வு துறையினர் என மாறி மாறி பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர். எமக்கு அச்சமான நிலை காணப்படுகின்றது எனவும் தெரிவித்தனர். (அ-2-266)

# வீதி அகலிப்பு பணிக்காக வீதி மூடப்பட்டிருக்கும்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில், நல்லூர் பிரதேச சபையினரால் கோண்டாவில் இருபாலை வீதியில் வீதி அகலிப்பு வேலைகள் இடம்பெறுவதால் இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இப்பாதையூடான போக்குவரத்து தற்காலிகமாக மூடப்படும் என நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப. வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

இதற்கு மாற்று வழியாக பலாலி வீதியில் அமைந்துள்ள உப்புறப்பாதையினை போக்குவரத்திற்கு பயன்படுத்துமாறு பொதுமக்களை அவர் கேட்டுள்ளார். (அ-2)

# பாரதியாரின் பெண்விடுதலை தொடர்பான கருத்தாடல்

(பூந்தோட்டம்)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடத்தும் மாதாந்த முழுநிலா கருத்தாடல் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் வரவேற்புரையினை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆசிரியை செல்வி கஜபதி பாண்டித்துரை நிகழ்த்தவுள்ளார். அத்துடன் இந்நிகழ்வில் மகாகவி பாரதியாரின் பெண் விடுதலை தொடர்பான கருத்தாடல் இடம்பெறவுள்ளது.

மகாகவி பாரதியாரின் பெண் விடுதலை தொடர்பான கவிகளை கவிஞர்களான குரும்பையூர் த. ஐங்கரன், மாணிக்கம் ஜெகன், ப.ஏ. அன்ரன் ஆகியோர் வடிக்க தொடக்கவுரையினை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய கல்வியியலாளர் நெலோமி அன்ரனி குரூஸ் நிகழ்த்துவார். சிறப்புரையினை வவுனியா தெற்கு வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் கவி எழில், திருமதி த. நிறைமதி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (அ-2)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

விமலராஜன் துஸ்மிதா



யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவி வி.துஸ்மிதா புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையிட்டு அவரை மனதார வாழ்த்துகின்றோம். அத்துடன் அவர் கல்வியில் மென்மேலும் சிறப்படைய பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:- சித்தப்பா, சித்தி, அப்பம்மா, அப்பப்பா

கௌதமி பேக்கரி,
A.P லேன், முஸ்லிம் தெரு,
யாழ்ப்பாணம்.

(50

வாழ்த்துகின்றோம்



தமிழ், ஆங்கில அரச மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட **செல்வராசா ஞானராசா** அவர்கள் மென் மேலும் பல பதவிகளைப் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**கமலேந்திரன் உதயகுமார்**
**சுதுமலை வடக்கு, மானிப்பாய்.**

(515)

தூய வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையின் திருவிழா



போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

29.09.2012 (சனிக்கிழமை) நற்கருணை பெருவிழாவும் குணமாக்கல் வழிபாடும் மாலை 4.00 மணி

30.09.2012 (ஞாயிற்றுக்கிழமை) திருவிழாத் திருப்பலி காலை 7.00 மணி

அன்னையின் ஆசீர் பெற அன்போடு அழைக்கின்றோம்.

ஆன்மகுரு.

(513)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்துறையில் மோசடி செய்யமுடியாது பணம் ஒதுக்காமைக்கு இதுவே காரணம்

## ஐ.தே.க.ரோசி எம்.பி. கூறுகிறார்

கல்வித்துறையில் மோசடி செய்ய முடியாத காரணத்தினால் அரசாங்கம் அதிக பணத்தை கல்விக்காக ஒதுக்கீடு செய்வதில்லை என ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,ஊழல் மோசடிகள் செய்யக்கூடிய துறைகளிலேயே அரசாங்கம் பணத்தை முதலீடு செய்கின்றது. பிள்ளைளகளுக்கு நல்ல கல்வியை வழங்க வேண்டும் என்பதே பெற்றோரின் இலக்காகும்.

கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலின்போது ஜனாதிபதி மஹிந்த சிந்தனைத்திட்டத்தின் ஊடாக கல்வித்துறை தொடர்பில் பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன.

பாடசாலை மாணவ மாணவியருக்கு பகல் உணவு வழங்குதல் ஒவ்வொரு பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய பாடசாலை ஒன்றை நிறுவுதல் போன்ற பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன.

உலகின் வறிய நாடுகள் கூட அதிகளவான பணத்தை கல்வித்துறைக்காக ஒதுக்குகின்றன.

எமது நாட்டின் கல்வித்திட்டம் பிரமிட் கட்டமைப்பை ஒத்தது. ஆரம்பத்தில் பலர் இதில் இணைந்து கொள்வார்கள். எனினும் இறுதியில் ஒரு சிலர் மட்டுமே எஞ்சுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சட்டவிரோத பயணம்; 19 பேர் கைதாகினர்

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு சென்று கொண்டிருந்த 19 பேர் நேற்று முன்தினம் அதிகாலை இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேவேந்திரமுனை கடலில் இருந்து 27 மைல் கடல் தூரத்தில் இவர்கள் வழிமறிக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 9 முஸ்லிம்கள், 7 சிங்களவர்கள், மற்றும் மூன்று தமிழர்கள் அடங்குவர்.

இவர்கள் கொழும்பு, வவுனியா, திருகோணமலை, புல்மோட்டை மற்றும் திக்குவெல்ல ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

குறித்த நபர்கள் காலி துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டு மேலதிக விசாரணைகளுக்கென குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# இந்தியாவின் ஏவுகணையால் இலங்கைக்கு பாதிப்பில்லை

இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளை தனது ஏவுகணைகளை இலக்கு வைப்பதாக வெளியான செய்திகளை இந்தியா நிராகரித்துள்ளது. இவை முற்றிலும் ஆதாரமற்ற புனையப்பட்ட கதைகள் என இந்தியா தெரிவித்துள்ளது.

இந்தியா நீண்டகாலமாக உள்நாட்டு ஏவுகணைகளை அபிவிருத்தித் திட்டத்தை கொண்டுள்ளது எனவும் அத்திட்டம் தற்பாதுகாப்பு அடிப்படையிலானது எனவும் அது எந்தவொரு நாட்டையும் இலக்கு வைக்கவில்லை எனவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குடன் அண்மையில் தான் மேற்கொண்டு சந்தித்தமை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திருப்தி தெரிவித்த நிலையில் இந்தியாவின் இவ்வறிவிப்பு வெளியாகியுள்ளது.

இவ்விஜயம் வெற்றிகரமாக அமைந்தது. எமது நெருங்கிய அயல்நாடான இந்தியாவுடனான எமது நீண்ட வரலாற்று ரீதியான உறவுகளை மேலும் வலிமைப்படுத்த இவ்விஜயம் உதவியது என ஊடக ஆசிரியர்களுடனான மாதாந்த சந்திப்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சீனா-இலங்கை இடையே நெருங்கிய உறவு அவசியம்

## இலங்கைக்கான சீன தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நெருங்கிய உறவு அவசியமானது என சீனாவின் இலங்கைக்கான தூதுவர் ஊ ஜின் காவோ தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 55 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இரண்டு நாடுகளும் பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்து செயற்படலாம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் டி.இ.டபிள்யூ. குணசேகர, தமிழீழ விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு சீனா வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்தார். சீனாவுடன் இலங்கை தொடர்ந்து சிறந்த உறவினை பேணும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)




★1227-புனித ரோமப் பேரரசன் இரண்டாம் பிரெடெரிக் சிலுவைப் போரில் பங்குபற்றாமல் போனதை அடுத்து திருத்தந்தை ஒன்பதாம் கிரகரி அவனை மதவிலக்கம் செய்தார்.

★1567-பிரான்சில் இரண்டாம் சமயப் போர் ஆரம்பமானது.

★1833-மூன்று வயதுள்ள இரண்டாம் இசபெல்லா ஸ்பெயின் அரசியாக முடிசூடினாள்.

★1848-ஹங்கேரியப் படையினர் குரொவெசியர்களை பாகொஸ்ட் என்ற இடத்தில் இடம்பெற்ற ஹங்கேரிப் புரட்சிப் போரில் தோற்கடித்தனர்.

★1850-இங்கிலாந்திலும் வேல்சிலும் ரோமன் கத்தோலிக்க உயர் சபையை திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் மீண்டும் அமைத்தார்.

★1885-உலகின் முதலாவது மின்சார திராம் வண்டி இங்கிலாந்தில் பிளாக்பூல் நகரில் சேவையை ஆரம்பித்தது.

★1911-இத்தாலி ஒட்டோமான் பேராட்சிக்கெதிராகப் போர் தொடுத்தது.

★1916-ஜோன் ரொக்பெல்லர் உலகின் முதலாவது கோடீஸ்வரர் ஆனார்.

★1918-முதலாம் உலகப் போர்: பல்கேரியா கூட்டுப்படைகளுடன் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது.

★1938-செக்கோசிலவாக்கியாவின் சுடெட்டென்லாந்துப் பகுதியை ஆளும் உரிமையை ஜேர்மனிக்கு வழங்குவதற்கான உடன்படிக்கையில் பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் இத்தாலி ஆகியன கைச்சாத்திட்டன.

★1941-உக்ரேனின் கீவ் நகரில் குறைந்தது 33 ஆயிரத்து 771 யூதர்கள் நாசி ஜேர்மனியரினால் கொல்லப்பட்டனர்.

★1962-கனடாவின் முதலாவது செய்மதி அலூட் 1 ஏவப்பட்டது.

★1971-அரபுக் கூட்டமைப்பில் ஓமான் இணைந்து கொண்டது.

★1972-ஜப்பான் மக்கள் சீனக் குடியரசுடனான தூதரக உறவை மீள அமைத்து சீனக் குடியரசுடனான உறவை முறித்துக் கொண்டது.

★1991-எயிட்டியில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.

★1993-மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 10 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.

★2003-சூறாவளி ஜுவான் கனடாவின் ஹாலிபாக்ஸ் துறைமுகத்தைத் தாக்கிப் பேரழிவை விளைவித்தது.

### பிறப்புக்கள்

★1901-என்ரிக்கோ பெர்மி, இத்தாலிய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1954)

★1920-அரங்க சீனிவாசன், தமிழகக் கவிஞர், எழுத்தாளர் (இ.1996)

★1936-சில்வியோ பெர்லுஸ்கோனி, இத்தாலிய பிரதமர்

★1951-மிசெல் பாச்செலெட், சிலியின் குடியரசுத் தலைவர்

★1975-ஸ்டுவட் கிளார்க், அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்

★1988-கெவின் டுரான்ட், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்பு

★1969-சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா, இலங்கையில் இலவசக் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர். (பி.1884)

சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா கிறிஸ்தோபர் வில்லியம் விஜயகோன் கன்னங்கரா இலங்கையின் கல்வித்துறையின் தந்தையாக வணங்கப்படுகின்றார்



இவரே இலங்கையில் இலவசக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட காரணமாக அமைந்தார். இவர் அம்பலாங்கொடை வெஸ்லி ஆங்கில உயர் பாடசாலையிலும் பின்பு காலி றிச்மண்ட் கல்லூரியிலும் கல்வி பயின்றார். பின்னர் இவர் ஆசிரியராக மொரட்டுவ பிரின்ஸ் ஆப் வேல்ஸ் கல்லூரி போன்ற பாடசாலைகளில் கடமையாற்றினார்.

சட்டத்துறையில் தகுதி பெற்ற இவர் பின்பு காலியில் சட்டத்தரணியாகக் கடமையாற்றினார். 1919 இல் அரசியலில் நுழைந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சற்ற போசணையுள்ள புதிய காய்கறிகளையும் பழங்களையும் எமது உணவுடன் சேர்த்துக் கொள்வதற்காக வீட்டுத் தோட்டத்தில் பயிரிடுவோம். சென்ற தொடரில் பயிர்களை எவ்வாறு நடுகை செய்வது பற்றி எழுதி இருந்தேன். இனி எவ்வாறு அவற்றை பராமரித்து பயன்பெறுவது என்பது பற்றி பார்ப்போம்.

எங்களால் நீர் இல்லாமல் வாழ முடியாது. அதுபோல பயிர் வகைகளாலும் நீர் இல்லாமல் வாழ முடியாது. பயிர்கள் உயிர் வாழ, செழிப்பாக வளர நீர் மிகவும் அவசியமானதொன்று. அதற்காக அளவுக்கு அதிகமாக நீர் விடும்போது பயிர்கள் அழிந்து விடும்.

நீர் விடும்போது பயிர்களின் வகை, காலநிலை, நிலத்தின் தன்மை போன்றவற்றை கவனிக்க வேண்டும். வெப்பம் அதிகமாக இருக்கும் கோடை காலங்களில் பயிர்களின் வேரை எப்போதும் ஈரப்பதத்துடன் வைத்திருக்க தினமும் நீர் ஊற்ற வேண்டும்.

தோட்டமண், களித்தன்மையுடைய நிலமானது நீரை சேகரித்துக் கொண்டு ஈரப்பதத்தை தக்கவைத்துக் கொள்ளும். இப்படியான மண் உள்ள இடங்களுக்கு தினமும் நீர் பாய்ச்ச வேண்டியதில்லை.

வீட்டுத் தோட்டம் அமைந்துள்ள இடத்தில் சிறந்த வடிகால் வசதி இருத்தல் மிக அவசியமாகும். அத்துடன் வாரத்துக்கு ஒருமுறை பயிர்களை சுற்றி இருக்கும் மண்ணை மட்டும் லேசாக கிளறி விடவேண்டும்.

உலர்ந்த புற்கள், வைக்கோல் போன்றவற்றை பயன்படுத்தி பத்திரக்கலவை இட்டு மண்ணை மூடலாம். இதனால் மண்ணின் ஈரப்பதன் பாதுகாக்கப்படுவதுடன் களைகளையும் இலகுவாக கட்டுப்படுத்தலாம்.

தினமும் பயிர்களுடன் காலை அல்லது மாலை வேளைகளில் ஒரு அரைமணி நேரமாவது செலவிட்டு அவற்றின் வளர்ச்சியை கண்காணிக்க வேண்டும். அதனுடன் பேசலாம். அதையும் ஒரு உயிராக மதித்து பழகி வந்தோமானால் பயிர்கள் நன்றாக வளர்வதுடன் எங்களது மன அழுத்தங்களும் குறைந்துவிடும். வீட்டுத்தோட்டத்தில் மிகக்குறைவான இடத்தில் பயிர்களை வளர்ப்பதாலும் பல்வேறு வகைப்பட்ட பயிர்களை வளர்ப்பதாலும் மிகவும் எளிதாக நோய்கள் ,பூச்சி பீடைகள் கட்டுப்பாடுகளை மேற்கொள்ள முடியும். இரசாயன பூச்சிகொல்லி மருந்துகளை பயன்படுத்த வேண்டியதில்லை.

பயிர்களில் புழுக்கள்,பூச்சிகள் தென்பட்டால் அவற்றை கையால் எடுத்து அழிக்கலாம். அத்துடன் பீடைகளை கட்டுப்படுத்த வேப்பெண்ணெய், வேப்பம் விதைச் சாறு, வேப்பம் பிண்ணாக்குச் சாறு, பஞ்சகவ்யம் , உள்ளிக்கரைசல் போன்றவற்றை பயன்படுத்தலாம்.

உரங்களைப்பயிர்களுக்கு இடும்போது வேப்பம் பிண்ணாக்கு சேர்த்து இட்டு வந்தால் இலை உண்ணும் பூச்சிகள், புழுக்கள், சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்கத்தை குறைக்கலாம். நோய்கள், பூச்சிகள் தாக்கிய தாவர பாகங்களை , பயிர்களை அகற்றுவதன் மூலமும்,இறந்தபயிர்களைஅகற்றுவதன்மூலமும் களைகளை கட்டுப்படுத்துவதன் மூலமும் நோய், பூச்சி பீடைகளை கட்டுப்படுத்தலாம்.

பாகல், பூசணி,புடோல்,பீர்க்கு,கெக்கரி போன்றவற்றில் பழஈயின் தாக்கத்தினால் காய்கள் அழுகுவதை தவிர்த்துக்கொள்ள காய்கள் சிறிதாக இருக்கும் போதே உறையிட வேண்டும். இதற்காக கடதாசி உறை, அடிப்பகுதி திறந்துவிடப்பட்ட பொலித்தீன் உறைகளை பயன்படுத்தலாம். குறித்த காலத்தில் காய்கறிகளை அறுவடை செய்யும் போதுதான் சிறந்த பயனைப் பெற முடியும். ஆரோக்கியமான காய்கள் சிலவற்றை நன்கு முதிர்ச்சியடைய விடுவதன் மூலம் அடுத்த நடுகைக்கான விதைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அக்கறையும் கவனமும் இருந்தால் இரசாயன உரம் பயன்படுத்தாத, பூச்சி கொல்லிகள் தெளிக்காத, குறைந்த செலவில் நம் வீட்டில் கிடைக்கின்ற வளங்களை பயன்படுத்தி பெறமுடியும்.


வீட்டுத்தோட்டத்திலிருந்து குடும்பத்துக்கு தேவையான சத்தான, சுத்தமான காய்கறிகள் கிடைப்பதோடு தேவைக்கு அதிகமாக உள்ள காய்கறிகளை விற்பனை செய்வதன் மூலம் மேலதிக வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

பயிர்களுடனான காதலால் வரும் இன்பம் எத்தகையது என்பது சொன்னால் புரியாது அனுபவித்து பார்த்தாலே தெரியும். வீட்டுக்கொரு வீட்டுத்தோட்டம் வைப்போம்.

(முற்றும்)

# வளமான வாழ்வுக்கு வீட்டுக்கொரு வீட்டுத்தோட்டம்

03



| பயிர்கள் | அறுவடைக்காலம் |
|---|---|
| கத்தரி | 75 நாட்களில் முதலாவது அறுவடை |
| பயற்றை | 45 நாட்களல் முதலாவது அறுவடை |
| போஞ்சி | 60 நாட்களில் முதலாவது அறுவடை |
| பாகல் | 2-2 1/2 மாதங்ளில் முதலாவது அறுவடை |
| பூசணி | 3-3 1/2 மாதங்ளில் முதலாவது அறுவடை |
| புடோல் | 2-2 1/2 மாதங்ளில் முதலாவது அறுவடை |
| சிறகவரை | 90 நாட்களில் முதலாவது அறுவடை |
| பசளி | 45 நாட்களில் முதலாவது அறுவடை |
| கீரைகள் | 4-6 வாரங்களில் |
| கரட் | 3-3 1/2 மாதங்களில் |
| வெண்டி | 1-1 1/2 மாதங்ளில் முதலாவது அறுவடை |
| தக்காளி | 60 நாட்களில் முதலாவது அறுவடை |
| முள்ளங்கி | 45 நாட்களில் |
| பீர்க்கு | 2-2 1/2 மாதங்களல் முதலாவது அறுவடை |
| கெக்கரி | 2-2 1/2 மாதங்களல் முதலாவது அறுவடை |

சத்யா.கோமேஷ்
3ஆம் வருட மாணவி,
விவசாயபீடம்.

# தெல்லிப்பழை பகுதியில் 3 பேர் டெங்குநோயில்

(கொழும்பு)

யாழ்.தெல்லிப்பழையில் பிரதேச செயலாளர் பிரிவில் மூன்று பேர் டெங்கு நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியமை அடையாளம் காணப்பட்டள்ளதாக சுகாதார சேவைகள் பணிமனையின் தெல்லிப்பழை அலுவலகம் தெரிவித்துள்ளது.


இவர்கள் தெல்லிப்பழை, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் அந்த அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த பகுதியில் உடனடியாக புகை விசிறப்பட்டுள்ளதுடன் நோயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் அந்த பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்பட்ட 3 பேர் நோயாளர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர் என யாழ். தெல்லிப்பழை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(அ-2)

ஓராண்டு நினைவஞ்சலி
எங்கள் குடும்ப குலவிளக்கு
மலர்வு 25 04 1976
உதிர்வு 11 10 2011



அமரர் சிவப்பிரகாசம் ரமேஸ்குமார் (ஆசிரியர்- கி/ செல்லியாதீவு அ.த.க.பா.)
அன்புச் செல்வமே எங்கு சென்றாயடா உன் நினைவில்
ஓராண்டு ஓடி மறைந்து விட்டதையா
பாச உறவுகளை பரிதவிக்கவிட்டுச் சென்றாயோ
குதூகலமாக வாழ்வாய் என்றெண்ணினோம்
எமை குமுறி அழவைத்தாயேடா அண்ணா அண்ணா என்றழைத்த
அன்புத் தம்பி தங்கையரை அநாதரவாக்கிச் சென்றாயே
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!
29.09.2012 சனிக்கிழமை நடைபெறும் ஓராண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
கறுக்காய்த்தீவு, பூநகரி.
திரு. சிவபுண்ணியம் சிவப்பிரகாசம் குடும்பத்தினர்.
(511)

# நாட்டில் மீண்டும் குழப்பநிலையை ஏற்படுத்த பிரிவினைவாதிகள் முயற்சி

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

நாட்டில் மீண்டும் குழப்ப நிலையை ஏற்படுத்த பிரிவினைவாதிகள் முயற்சித்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மாத்தறையில் நடைபெற்ற படைவீரர் பாராட்டு நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதம் நீடித்த காலத்தில் உயிர்கள், சொத்துக்கள் மற்றும் பொருளாதாரத்திற்கு பாரிய அழிவு ஏற்பட்டது. இதே நிலைமையை மீளவும் ஏற்படுத்த உள்நாட்டு, வெளிநாட்டு சதிகாரர்கள் முயற்சிக்கின்றனர். உயிர்த்தியாகம் மூலம் படையினர் பெற்றுக்கொடுத்த சுதந்திரம் ஓரிரு ஆண்டுகளில் பறிபோகக் கூடாது. படைவீரர்கள் ஆற்றிய அளப்பரிய சேவையை நாட்டு மக்களும் அரசாங்கமும் பாராட்டுகின்றது என்றார். (அ-2)

# யுத்த வெற்றியால் அனுபவம் மிக்க கடற்படையாக உருவெடுத்தோம்

## புதிய கடற்படைத் தளபதி ஜயனாத் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆயுதக் குழுக்கள் மீளவும் தலைதூக்க இடமளிக்க மாட்டேன் என புதிய கடற்படைத் தளபதி ஜயனாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

புதிய கடற்படைத் தளபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தீவு நாடான இலங்கையின் கடல் எல்லைகளை சிறந்த முறையில் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

போரில் வெற்றியடைந்த காரணத்தினால் கடற்படையினர் அனுபவம் மிக்க வெற்றிகரமான கடற்படையாக மாறியுள்ளனர்.

போர் பயிற்சி மற்றும் வழிகாட்டல்களின் மூலம் இந்த வெற்றியை தக்கவைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கைக் கடற்படைக்கு தலைமை தாங்கக் கிட்டியமை மகிழ்ச்சி அளிக்கின்றது. சட்டவிரோத ஆட்கடத்தல்,போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு கடல்வழி சட்டவிரோத நடவடிக்கைகளும் தடுக்கப்படும்.

கடற்படை வீரர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

55

# சோழராட்சியில் இலங்கை

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

### உத்திரதேசத்தில் சோழராட்சி

உருகுணை தவிர்ந்த பிறபாகங்கள் சோழராட்சிக்கு உட்பட்டன என்று சூளவம்சம் கூறுமிடத்து யாழ்ப் பாணப் பகுதியையும் பொலநறுவை



சோழனின் உருவச்சிலை - தஞ்சைப் பெரிய கோவில்


யிலிருந்து ஆட்சி நடத்திய சோழரு டைய ஆதிக்கத்தினுள் அடங்கியிருந் தது என மறைமுகமாகத் தெரிவித் துள்ளது.

11 ஆம் நூற்றாண்டில் சோழ ராட்சியின்போது பொறிக்கப்பட்ட சில கல்வெட்டுகள் யாழ்ப்பாணத்தில் கிடைத்துள்ளன. முதலாவது சாசனம் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தது. இது யாழ்ப்பாணக் கோட்டைக்குள்ளேயே கண்டு பிடிக்கப்பட்டது. வேறு இரு சோழராட்சிக் காலத்துச் சாசனங்கள் ஊர்காவற்றுறைக் கோட்டைக் குள்ளே கண்டுபிடிக் கப்பட்டன. இவை அனைத்தும் 11 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சோழராட்சி உத்தரதேசத்தில் நிலவியதை உறுதிப்படுத்துகின் றன.



தஞ்சை பொரிகோவில் பகுதியில் காணப்படும் சுவர் ஓவியம்- இராஜ ராஜசோழன்


உத்தரதேசத்தில் சோழரால் நியமிக்கப்பட்ட அரசப்பிரதிநிதிகள் பலர் நிர்வகித்து வந்தார்கள் என நம்ப இடமுண்டு. கி.பி. 948 ஆம் ஆண்டளவில் புவனேகபாகு அல்லது புவனேசவாசர் என்பவர் சிங்கை நகர்ப் பகுதிக்குரிய அரச பிரதிநிதியாக இருந்திருக்க வேண்டும். இவன் சோழப் பராந்தகனின் பிரதிநிதியாக இங்கு நியமனம் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் கி.பி. 945 காலகட்டத்தில் சோழப்பராந்தகனின் படையெடுப்பு இலங்கைக்கு வந்து சிங்கள அரசனான 4 ஆம் உதயனைப் புறங் கண்டான் என்றும், சிங்கை நகர் அரசனைக் கொன்றான் என்றும் வரலாற்றுக்குறிப்புள்ளது. இச்சோழ மன்னனின் பிரதிநிதியாகப் புவனேகவாகு சிங்கைநகரில் ஆட்சிப் பொறுப்பில் இருந்துள்ளான்.



தமிழ்நாட்டில் உருத்திரமேரூரில் பராந்தக சோழனின் நிலவறை


### விக்கிரமபாகு

அதேவேளை நாட்டுமக்கள், இளவரசனும் ஐந்தாம் மகிந்தனின் மகனுமாகிய இளம் காசியப்பனை மிகக் கவனமாகச் சோழ மன்னர்களின் கண்களில் படாது பாதுகாப்பதில் சிரத்தையாகவிருந்தனர். காசியப்பனுக்கு பன்னிரண்டு வயதாகிறதென்ற செய்தியை அறிந்த சோழ மன்னன், தனது படைத் தலைவர்களை அனுப்பி அவனைச் சிறைப்படுத்து மாறு கட்டளை பிறப்பித்தான். அப்படையில் 95 ஆயிரம் வீரர்கள் இருந்தனராம். அவர்கள் உருகுணையை முற்றுகையிட்டுச் சல்லடையிட்டு இளவரசனைத் தேடினர். அரச பணியிலிருந்த கீர்த்தி, புத்தா ஆகிய இரு மாபெரும் வீரர்கள் தம் படையுடன் சென்று சோழ படையை சிதறடித்தனர். பின்னர் பாலுத்தகிரியில் பாசறை அமைத்து, ஆறுமாதங்கள் தொடர்ந்து போரிட்டு ஏராளமான தமிழ்வீரர்களை அழித்தனர். சோழரின் சேனை புலத்திநகரிற்குப் பின்வாங்கிச் சென்றது.



உலகிலேயே முதன் முதலில் இராஜ ராஜ சோழன் பாவித்த படகின் மாதிரி


இளவரசன் காசியப்பன் இவ்விரு படைத் தளபதிகளுக்கும் அவர்கள் விரும்பி கிராமங்களைப் பரிசாகக் கொடுத்தான். சோழ நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்ட மகிந்தமன்னன் பன்னிரண்டாண்டுகளுக்குப்பின் (கி.பி 1029) சோழநாட்டில் இறந்தான்.






சோழனின் ஆட்சிப்பிரதேசம்

மகிந்தனின் மகனான காசியப்பன், விக்கிரமபாகு என்ற சிம்மாசனப் பெயரோடு உருகுணையில் முடிசூடிக் கொண்டனர். எஞ்சிய இலங்கை சோழராட்சியினுள் அடங்கிக் கிடந்தது. விக்கிமபாகுவின் முழுச் சேனைளும் தமிழர்களை வெற்றி கொள்வதற்கான முயற்சிகளை அடைவதிலேயே இருந்தது. அனுராதபுரத்தினைச் சோழரிடமிருந்து மீட்டு, அரியணை ஏறும்போது தேவைப்படுமென சிம்மாசனம், மகுடம், செங்கோல், ஆபரணங்கள், கொற்றக்குடை என அனைத்தையும் செய்து தயார் நிலையில் வைத்திருந்தான். அவற்றினை உருகுணையில் பயன்படுத்த மறுத்துவிட்டான். “ராஜரட்டையில் முடிசூடும்போதுதான் என் கொற்றக் குடை உயரும்” எனச் சூளுரைத்தான்.




வயோதிபர் ஒருவரால் பூஜிக் கப்பட்டு வருகின்ற அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட 1 ஆம் இராஜ ராஜ சோழனின் சமாதி- தமிழ்நாட்டில்

போர்வீரர்களைத் திரட்டி யுத்தத்திற்கு ஆயத்தமாகும் வேளையில் கடும் நோய்வாய்ப்பட்டான். யுத்தத்திற்கு இது ஏற்ற தருணமல்ல எனக் கூறினான். அந்நோயின் காரணமாக ஆட்சியேற்ற பன்னிரண்டாவது ஆண்டில் மரணமடைந்தான். அதன் பின்னர் கீர்த்தி என்ற படைத் தலைவன், தன்னை ஆட்சியாளனாகப் பிரகடனப்படுத்திக் கொண்டான். அவருடைய ஆட்சி ஏழு நாட்களே நிலைத்தது. ஏனெனில், மகாலானகீர்த்தி என்பவன் அவனைக் கொன்று உருகுணையின் அரசனாகினான். அவனுடைய ஆட்சியின் மூன்றாம் வருடம் சோழர் படையெடுத்து, உருகுணையைக் கைப் பற்றிக் கொண்டனர். மகாலானகீர்த்தி, தன் கரத்தினால் தன் கழுத்தினை அரிந்து தற்கொலை செய்து கொண்டான். தமிழர்ப்படை உருகுணையை வழமைபோலச் சூறையாடி புலத்திநகர் மீண்டது என்கிறது சூளவம்சம்.



பொலநறுவையில் அகழ்வாய்வின் போது அகப்பட்ட நடராஜர் விக்கிரகம்

அதற்குப் பிறகு, விக்கிரமபாண்டு என்ற அரசவழியைச் சேர்ந்தவன், உருகுணையின் ஆட்சியாளனாக ஒருவருடம் ஆட்சிபுரிந்தான். அவனை ஜகதிபாலா என்பவன் போரில் கொன்று உருகுணையை நான்கு வருடங்கள் ஆண்டான். சோழர்கள் மீண்டும் படையெடுத்து அவனை வென்று கொன்றதன் பின்னர், அவனது ராணியையும் மகனையும் திரவியங்களையும் கவர்ந்து சோழநாட்டிற்கு அனுப்பிவைத்தனர். அதன்பின் பாண்டுவின் மகனான பராக்கிரமா என்பவன் இரண்டாண்டுகள் உருகுணை மன்னனாக விளங்கினான். அவனையும் சோழர் படை வென்று சிரம் அரிந்தது. சோழராட்சி கி.பி. 993 இலிருந்து 1070 வரை நிலவியது.



பொலநறுவை சிவன்கோவிலில் காணப் படும் சோழர்கால தமிழ்க்கல்வெட்டு

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனியாமோட்டை மக்களே! வீண் கவலை வேண்டாம்

## வீடு கட்டித்தரப்படும்— கருணா தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாபிலவு சீனியா மோட்டை காட்டுப்பகுதிகளில் மீளக்குடியேற் றப்பட்ட மக்கள் எவ்வித குழப்பமும் அடைய வேண்டியதில்லையென மீள்குடியேற்ற பிரதி யமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரி வித்துள்ளார்.

எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி அந்த மக்களை அரசு குடியமர்த்திவிட்டதாக சில விஷமிகள் பொய்ப்பிரசாரங்களை முன் னெடுக்கின்றனர். இப்பகுதிக்கு விஜயம் செய்து அந்த மக்களை குழப்ப முயற்சிக்கிறார் கள்.

எனவே, மக்கள் இது குறித்து அச்சப்படத் தேவையில்லை. இடம்பெயர்ந்த மக்கள் அனை வரையும் எவ்வாறு சலக வசதிகளுடனும் அரசு மீளக்குடியமர்த்தியதோ அதேபோன்று இவர் களுக்கும் உரிய சகல கொடுப்பனவுகள், வச திகளுடன் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக தற்காலிக வீடுகளுடன் உலர் உணவு என்பன வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்குரிய நிரந்தர வீடுகள் விரைவில் வழங்கப்படும். இந்திய வீடமைப்புத் திட்டம், கட்டம்கட்டமாக பூர்த்தியாகும் பட்சத்தில் அவர் களுக்கு வீடுகளும் வழங்கப்படும்.

தமிழ் மக்கள் மத்தியில் சென்று வீணான தகவல்களை தெரிவிப்பதன்மூலம் அந்த மக்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்படுவார் கள். எனவே, மக்கள் இது குறித்து விழிப்பாக இருக்க வேண்டும்.

மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் அன் றாட தேவைகள் குறித்து அரச அதிபர் தலை மையிலான குழு எந்நேரமும் ஆராய்ந்து வருகிறது.

மெனிக்பாம் முகாமிலிருந்து இறுதியாக 361 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 160 பேரின் நலன் மற்றும் தேவைகள் குறித்து ஆராய தான் விஜயம் செய்யவுள்ளதாக அவர் கூறியுள்ளார். (அ-2)

## சிறுவர் தினத்தை கொண்டாட ஏற்பாடு

உலக சிறுவர் தினத்தையொட்டி தொழி லமைச்சு ஏற்பாடு செய்துள்ள தேசிய வைப வம் எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி தொழிலமைச்சர் காமினி லொக்கு கேயின் தலைமையில் பண்டாரகமவில் கொண் டப்படவுள்ளது.

சிறுவர்களுக்கான பல்வேறு நிகழ்வுக ளுடன் பங்குபற்றும் சிறுவர்களுக்குப் பரி சுகளும் வழங்கப்படவுள்ளன. முழுநாள் நிகழ்வாக அன்றையதினம் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படவுள்ள துடன் பிற்பகலில் இலவச மருத்துவ முகா மொன்றும் நடத்தப்படவுள்ளதாக தொழில மைச்சு தெரிவித்துள்ளது. (அ-2)

# மாற்றுத்திறனாளிகளுக்கு நன்மை ஏற்படுத்தும் சட்டமூலம்

## விரைவில் நாடாளுமன்றில்

மாற்றுத்திறனாளிகளுக்கு நன்மை ஏற் படக்கூடிய வகையிலான சட்டமூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப் படவிருப்பதாக சமூக சேவைகள் அமைச்சின் மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய செய லக பணிப்பாளர் எம்.டி.சி.ஜயமான தெரிவித் துள்ளார்.

புதிய சட்டமூலம் தொடர்பில் சட்ட வரைஞர் திணைக்களத்தின் உதவியைப் பெறவிருப்பது டன் நீதிச் சபையுடன் கலந்துரையாடல்களை நடத்தவிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மாற்றுத் திறனாளிகளுக்கு அரசாங்கம் தொடர்ந்தும் பல்வேறு உதவிகளை மேற் கொண்டு வருகிறது. எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் அனைத்து அரச மற்றும் பொதுக் கட்டடங்கள் மாற்றுத் திறனாளிகள் இலகுவில் சென்று வரக்கூடிய வகையில் மாற்றப்பட்டிருக் கும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 500 குடும்பங்களுக்கு காணி உறுதி வழங்கல்

காணியற்ற 500 குடும்பங்களுக்கு காணி யுறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் இரு ந்து இதன்பொருட்டு குடும்பங்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள காணியுறுதி வழங்கும் நிகழ் வில் நீண்டகாலமாக சம்பந்தப்பட்ட காணிக ளில் வசிக்கின்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கி காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப் படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு ஆர ம்பிக்கப்பட்டு 40 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலை வர் தெரிவித்தார். (அ-2)

# சீனாவிலிருந்து பேருந்துகளை தருவிக்க துரித நடவடிக்கை

## போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தனியார் பேருந்து உரிமை யளாளர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத் தாது சீனாவில் இருந்து 3 ஆயிரம் பேருந் துகளை இறக்குமதி செய்வது குறித்து அரசா ங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது. கலந்துரையாடல்கள் இடம்பெறுவதாகவும் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

குறித்த பேருந்துகளை இறக்குமதி செய்வ தன் மூலம் இலங்கையின் போக்குவரத்துப் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்று அர சாங்கம் அண்மையில் அறிவித்தது.

இலங்கை போக்குவரத்து சபையில் 5 ஆயிரம் பேருந்துகளை சேவையில் ஈடுபடு கின்றன். அதில் 3 ஆயிரத்து 500 பேருந்து கள் வரை பாவனைக்கு ஏற்ற வகையில் அமைந் திருக்கவில்லை.

எனவே, சீனாவில் இருந்து பேருந்து களை இறக்குமதி செய்ய ஆலோசிக்கப்பட்ட தாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இதற்கு தனியார் பேருந்து உரிமையாளர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். போக் குவரத்துத்துறையில் ஆதிக்கத்தை ஏற்படுத் துவதற்காகவே அரசாங்கம் இந்த நடவடிக் கையை எடுப்பதாக த்னியார் போக்குவரத்து துறையினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் இறக்குமதி வரியற்ற வகையில் பாவனைக்காக 312 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இறுதியாக அம்பாந்தோட்டை துறைமுகத் துக்கு வந்த கப்பலில் இருந்து 525 வாகன ங்கள் இறக்கப்பட்டன. அதில் 312 சொகுசு வாகனங்கள் இறக்குமதி தீர்வையற்ற வகை யில் தருவிக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்துக்கு இறக்குமதி வரியற்ற வாகனங்கள் காரணமாக பல மில் லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (அ-2)

# கிளிநொச்சி சந்தைக் கட்டட பணிகளை துரிதப்படுத்த பணிப்பு

## அமைச்சர் டக்ளஸ் ஆராய்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நவீன சந்தையின் சகல தொகு திகளையும் இயக்குவதற்கான நடவடிக்கை களை துரிதமாக மேற்கொள்ளுமாறு பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா துறைசார்ந்தோரிடம் பணிப்புரை வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள நவீன சந்தைப் பகுதிக்கு நேற்று முன்தினம் அமை ச்சர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இதன் போது டிப்போ வீதியில் சந்தையின் ஏனைய கடைத்தொகுதிகள் தற்போது இயங்கி வரும் நிலையில் அவற்றை நவீன சந்தைப் பகுதி யில் தற்காலிகமாகவேனும் இயக்குவதற் கேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு தெரிவித்ததுடன் இதன்போது எதிர்கொள்ளப் படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பிலும் அமை ச்சர் கவனம் செலுத்தினார்.

கிளிநொச்சி நவீன சந்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 284 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் முதற்கட்டம் 38 மில் லியன் ரூபாவில் முதற்கட்ட வேலைகள் முடி வடைந்த நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் கடந்த 25 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டதுடன் ஏனைய கட்டு மானப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


## தைரியலக்சுமி பூஜை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை தைரியலக்சுமிக் கான பூஜை நடைபெறவுள்ளது.

கலந்து கொள்ளும் பக்தர்கள் தேசிப் பழம், நெய், குங்குமத்துடன் பங்கேற் குமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)





கிளிநொச்சி மாவட்ட நில அளவைத் திணைக்களக் கட்டடத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் இணைந்து நாடாவை வெட்டி கட்டடத்தினைத் திறந்து வைப்பதையும் திறந்து வைக்கப்பட்ட கட்டடத்தினையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு அதீத வேலைப்பளு; ஐ.நா. அமர்வில் பங்கேற்கவில்லை

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

உலக நாடுகளின் பாரிய அழுத்தங்கள் இருந்த போதிலும் ஜனாதிபதி விஜயம் செய்ய வேண்டிய இடங்களுக்கு எல்லாம் சென்றார். ஐக்கிய நாடுகள் சபைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இம்முறைக்கு செல்லாமைக்கு அழுத்தமல்ல, அவருக்கு இருக்கின்ற வேலைப்பளு காரணமாகும் என்று ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

உலக நாடுகளில் பாரிய அழுத்தங்கள் இருந்த காலத்தில் எல்லாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச ரீதியில் விஜயங்களை மேற்கொண்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்திற்கு இம்முறை செல்லாமைக்கு அழுத்தமல்ல, வேலைப்பளு காரணமாகும். அதனால் இந்த கூட்டத்தொடரில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பிரிஸ் கலந்து கொள்கின்றார்.

இதேவேளை தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் பிரகாரம் வரவு செலவுத்திட்டத்தில் சம்பளத்தை அதிகரிக்க முடியாது.

பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுவது தொழிற்சங்கங்களின் உரிமையாகும். நாட்டில் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. வரப்பிரசாதங்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் வரவு செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பை வழங்குவது முடியாத காரியமாகும். அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்ற கட்சிகள் கிழக்கில் மும்முனைகளில் போட்டியிட்டன.

அதேபோல் ஒவ்வொரு பிரச்சினைக்கு தீர்வு காணப்படும். அதுபோல அடேல் பாலசிங்கத்திற்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சாதாரண பொதுமக்களும் சுமத்தலாம். அது தொடர்பில் தனக்கு தெரியாது என்றார். (அ-2)

# கடும் காற்றினால் 330 வீடுகள் சேதம்

(கொழும்பு)

கடந்த சில நாட்களாக நிலவிய கடும் காற்றுடன் கூடிய காலநிலையினால் பதுளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் 330 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக இடர் முகாமைத்து நிலையம் தெரிவித்துள்ளது.

பதுளை மாவட்டத்தில் 249 வீடுகளும் மொனராகலை மாவட்டத்தில் 81 வீடுகளும் சேதமடைந்துள்ளதாக அந்நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த பகுதிகளில் காற்றினால் கூரைகளுக்கே அதிகளவில் சேதமேற்பட்டுள்ளதாகவும் இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் கூறியுள்ளார். (அ-2)

# பேராசிரியர்களின் போராட்டம் அரச விரோத செயலே!

## அமைச்சர் நிமால் கூறுகிறார்

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்களின் போராட்டம் அரச விரோதசெயலாகவே கருதப்பட வேண்டுமென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக பேராசிரியர்களின் தொழிற்சங்க போராட்டத்தை கண்டிக்கும் நோக்கில் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்க பரீட்சை வினாத்தாள் மதிப்பீடுகளை புறக்கணித்து பல்கலைக்கழக பேராசிரியர்கள் முன்னெடுத்து வரும் தொழிற்சங்க போராட்டம் அரச விரோதமானது.

இந்த அரச விரோத சூழ்ச்சித்திட்டத் திட்டத்தை மக்கள் நிராகரிக்க வேண்டும்.

காலனித்துவ மற்றும் சுதேச கட்சிகளும் அமைப்புகளும் இணைந்து இலங்கையையும் லிபியாவாகவோ அல்லது சிரியாகவோ மாற்ற முயற்சிக்கின்றன.

தேச விரோத சக்திகள் பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியத்தை கைப்பொம்மையாக பயன்படுத்தி கொண்டுள்ளன.

ஆளும் கட்சி இலவச கல்வி முறைமைக்கு குந்தகம் ஏற்படுத்தாது என்றார். (அ-2)

# இஸ்லாமிய விரோத படத்தை தயாரித்த நபர் கைதானார்

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் வாழ்கின்ற முஸ்லிம்களின் மனதினை புண்படுத்தும் விதத்தில் இன்னஸன் ஒப் முஸ்லிம்ஸ் என்னும் படத்தினை தயாரித்த நபர் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகர சட்ட நிறுவன அதிகாரி டொம் முரோஸக் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

முஸ்லிம்களின் மனதினை புண்படுத்தும் விதத்தில் படத்தை தயாரித்து நெறிமுறைகளை மீறி இதனை இணையத்தில் வெளியீடு செய்த நகௌலா பஸ்ஸெல்லி நகௌலா (வயது 55) என்ற நபரே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இவரை சமஷ்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை சமஷ்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட மேற்படி நபருக்கு பிணை வழங்க சமஷ்டி நீதிமன்ற நீதிபதி மறுத்துள்ளார். உலகளாவிய ரீதியில் கலகங்களை தூண்டிவிடும் விதத்தில் நடந்து கொண்டமைக்காகவே பிணை வழங்க முடியாது என நீதிபதி கூறியுள்ளார். சமூகத்திற்கு ஆபத்தான விடயத்தினை சந்தேக நபர் செய்துள்ளதாகவும் நீதிபதி சுஸானி எச்.சீகல் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# தம்புள்ள பள்ளிவாசலை சுற்றியுள்ள மக்களை வெளியேறுமாறு உத்தரவு

(கொழும்பு)

தம்புள்ள பள்ளிவாசலை சுற்றியுள்ள சகல வீடுகளினதும் கடைகளினதும் உரிமையாளர்கள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியேற வேண்டுமென நகர அபிவிருத்தி அதிகார சபை உத்தரவிட்டுள்ளது.

அப்பிரதேசத்தில் அமைந்துள்ள 52 வீடுகள், 12 கடைத்தொகுதிகள் என்பவற்றை நீக்குமாறு அதன் உரிமையாளர்களிடம் நகர அபிவிருத்தி அதிகார சபை உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறிப்பிட்ட காணித்துண்டுகள் புனிதபூமி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 300/14 மற்றும் 1984.06.08 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின்படி அரசுடைமையாக்கப்பட்டுள்ளது.

தம்புள்ள புனிதபூமி அபிவிருத்தித் திட்டத்தை துரிதமாக ஆரம்பிப்பதற்காக நீங்கள் வசிக்கும் இடம்அல்லது வீடு புனிதபூமி அபிவிருத்தித்திட்டத்துக்கு தேவைப்படுகிறது.

அதற்கு பதிலாக தம்புள்ள கண்டலம் வீதி கொள்வத்தை என்ற இடத்தில் காணித்துண்டு ஒன்றை அடுத்த இருவாரத்துக்குள் வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அதற்கு தயாராகுமாறும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கு பள்ளிவாசலின் ஒரு பகுதி உள்ளடக்கப்படுவதாகவும் பள்ளிவாசலின் மறுபுறத்திலிருந்து 60 அடி பாதை ஒன்று அமைக்கப்படுவதாகவும் அம் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-2)

# சிறுவர் தினவிழா

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் சர்வதேச சிறுவர் தினவிழா எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் வவுனியா தெற்கு வலய மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.தவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். இதில் வவுனியா தெற்கு கல்வி வலய ஆரம்பப்பிரிவு மாணவர்களிடையே நடைபெற்ற திருக்குறள் மனனம், விரைவு கணிதம், கோலம் போடுதல், மாலை கட்டுதல், சிறுவர் நாடகம் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. (அ-266)

# இரு சடலங்கள் மீட்பு


(கொழும்பு)

கெக்கிராவ பகுதியில் அமைந்துள்ள வீடொன்றினுள் இருந்து இரு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் மேற்கொண்ட விசாரணையின் போது சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

47 வயதான ஆண் மற்றும் 50 வயதுடைய பெண் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

சடலங்களுக்கு அருகிலிருந்து கிருமிநாசினி போத்தல் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)



நவக்கிரி உதயநிலா முன்பள்ளியில் UR Friend Foundation நிறுவனத்தினால் முன்பள்ளி சிறார்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்படுவதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை.கேப்பாப்புலவு மக்களின் அவலம்

இலங்கை அரசாங்கத்தினதும், அரச படைகளினதும் திட்டமிட்ட வகையிலான நில ஆக்கிரமிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது, தமிழர்களின் பூர்விகக் கிராமமான கேப்பாப்புலவு.

தமக்கென தனித்துவமான பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள், வழிபாட்டுமுறைகள், தொழில், என தனித்துவத்தோடு வாழ்ந்துவந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசசெயலக பிரிவிற்குட்பட்ட மு/102 இலக்க கேப்பாப்புலவு கிராம மக்கள் போர் முடிவுக்குவந்து மூன்றாண்டுகள் பூர்த்தியாக்கப்பட்ட நிலையிலும் அவர்களது கிராமத்தில் மீள்குடியேற்றப் படர்து, மேலும் அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த 24.09.2012 அன்று அவசரஅவசரமாக பலவந்தமாக, அவர்கள் தங்கியிருந்த மெனிக்பாம் முகாமிலிருந்து இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டு, அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

வளமும் மீன்பிடித் தொழிலுக் கேற்ற கடல்வளமும் ஒருங்கே அமையப்பெற்ற கேப்பாப்புலவு கிராமத்தை சேர்ந்த குடும்பங்கள், பல தலைமுறைகளாக இக்கிராமத்தில் வாழ்ந்தவர்களாவர். நந்தியுடையார் வம்சத்தினரான தமிழ்மக்கள் இங்கு பரம்பரை பரம்பரையாக விவசாயம் மீன்பிடி, மந்தை வளர்ப்பு போன்றவற்றை பிரதான தொழிலாகக் கொண்டு இக்கிராமத்தில் வாழ்ந்து வந்துள்ளனர்.

கேப்பாப்புலவு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட புலக்குடியிருப்பு, கேப்பாப்புலவு, சூரிபுரம், சீனியா மோட்டை ஆகிய குக்கிராமங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாக சுமார் 2800 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதான இப்பகுதியில் மக்களின் குடியிருப்பு நிலமாக இருந்தது, 480 ஏக்கர் வரையான நிலப்பரப்பேயாகும். இதுதவிர 500 ஏக்கர், வயல் நிலமாகக் காணப்பட்டது. ஏனையபகுதி காடாகவும் பற்றைகளாகவும் காணப்பட்டன.

இக்கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம், முன்பள்ளி, 19 பொதுக் மக்களின் பாவனைக்குரிய சொத்துக்களாக அமைந்திருந்தன.

இவைதவிர பனை, தென்னை மற்றும் பயன் தரு பழமரங்கள் இங்கு நிறைந்திருந்தன.

இந்நிலைலேயே 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தின் பிற்பகுதியில் இப்பிரதேசத்தில் இடம்பெற்ற போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் படிபடியாக கைவேலி, வள்ளிபுனம், சுதந்திரபுரம் ஆச்சிதோட்டம், தேவிபுரம், இரணைப்பாலை, போன்ற இடங்களுக்கு இடம்பெயர்ந்து, இறுதியாக செட்டிக்குளம் நலன்புரி நிலையங்களில் தஞ்சம் அடைந்திருந்தனர். இவர்கள் கடந்த மூன்று வருடங்களாக நலன்புரி நிலையங்களிலேயே அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் மீள்குடியேற்றப்படாமல் சுமார் 412 குடும்பங்களைச்சேர்ந்த 1648 பேர் வரையானோர் தமது சொந்த இடத்தில்எப்போது மீள்குடி யேற்றப்படுவோம் என்ற ஏக்கத்தோடு உறவினர்கள், நண்பர்கள் வீடுளிலும் வவுனியா செட்டிக்குளம் நலன்புரிநிலையத்திலும் தங்கியிருந்தனர் என்பது கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

### படையினரின் பயன்பாட்டில் பயன்தரு வளங்களும் நிலமும்

இது இவ்வாறிருக்க கேப்பாப்புலவு கிராமம் முழுமையாக இராணுவத்தின் 591வது படைப்பிரிவினராலும் விமானப்படையினராலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதோடு அப்பகுதிக்குள் பொதுமக்கள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டும் உள்ளது. இராணுவத்தினரின் அறிவித்தல் பலகைகள் ஆங்காங்கு நாட்டப்பட்டுள்ளன.

### சைவர்கள் வாழ்ந்த கேப்பாப்புலவில் புதிதாய் ஒரு புத்தர்சிலை

அத்துடன் கேப்பாப்புலவு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள சூரிபுரம் குக்கிராமத்தில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானத்தில் ஆறடி உயரமுடைய புத்தர்சிலையொன்றை இராணுவத்தினர் நிர்மாணித்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

### எங்கள் நிலத்தில் எங்களைக் குடியேற்றுங்கள்



இந்நிலையில் கேப்பாப்புலவைச் சேர்ந்த குடும்பங்கள் இணைந்து தம்மை விரைவில் மீள்குடியேற்றக் கோரி மீள்குடியேற்ற அமைச்சர் முல்லைத்தீவு அரசாங்க அதிபர், முல்லைத்தீவு இராணுவக்கட்டளைத் தளபதி, ஜனாதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச வடமாகாண ஆளுநர் மற்றும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா ஆகியோருக்கு தொடர்ந்தும் மனுக்களை சமர்ப்பித்திருந்தனர். இருந்தும் இவர்கள், அரைகுறையாகத் துப்பரவு செய்யப்பட்ட சீனியாமோட்டைக் காட்டுக்குள் அடிப்படைவசதிகள் எதுவும் அற்ற நிலையில் தங்கவைக்கப்பட்டுள்ள நிகழ்வே நடந்தேறியுள்ளது.

### சர்வதேசத்தை ஏமாற்றும் நடவடிக்கை

நலன்புரி நிலையங்கள் மூடப்பட்டுவிட்டது, அங்கிருந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுவிட்டனர் என சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நோக்கில் மெனிக்பாம் முகாம் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் இலங்கை இராணுவத்தால் அடிமைகள்போல நடத்தப்படுவதை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

அது மேலும், சர்வதேச சமூகம் இம்மக்கள் மீதான இராணுவ நெருக்குவாரங்களை நீக்குவதற்கும் அவர்கள் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ள இடங்களில் அவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் அரசு மீது அழுத்தங்களைப் பிரயோகித்து காலதாமதமின்றி அவர்களை அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்என்றும் சர்வதேச சமூகத்தை கோரியுள்ளது.

முகாம்களில் வைக்கப்பட்டிருந்த மக்கள் முறையாக மீள்குடியமர்த்தப்படவேண்டும் என ஐ.நா.மனித நேய அலுவலகம் திரும்பத்திரும்ப வலியுறுத்துகின்ற போதிலும் அரசு தனது பொறுப்பற்ற நடவடிக்கைகளை திருத்திக்கொள்வதாக இல்லை என்பதையே தமிழ்மக்களின் தொடர் அவலம் எடுத்துக்காட்டுகிறது.

குறிப்பிட்ட கிராமத்திலுள்ள நிலங்கள் படையினரின் பயன்பாட்டில் உள்ளமையே இவ் அவலநிலைக்கு காரணமாகும்.

இப்பிரதேசத்தில் தமது இருப்புநிலைகளையும், படை முகாம்களையும் அமைத்துக்கொண்டு, மக்களின் சொந்த விளைநிலங்களில் இராணுவத்தின் தேவைக்காக படையினரால், பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

அரசாங்கம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளையும் அவர்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்ற உலர் உணவினை யும் எதிர்பார்த்தபடி, தொடர்ந்தும் தமது வாழ்க்கையை முட்கம்பி வேலிகளிடப்பட்ட முகாம்களுக்குள் கடந்த மூன்று ஆண்டுகளாக கழித்துக் கொண்டிருந்தனர் இந்த மக்கள்.

இம் மக்களை அரசு மீள்குடியேற்றுவது என்ற போர்வையில், கண்துடைப்பு நிகழ்வொன்றை நடத்தி முடித்துள்ளது. அதாவது, கடந்த 24.09.2012 இல் உடனடியாக மெனிக்பாம் முகாமை மூடிவிட்டு, அம்மக்களை சொந்த இடத்தில் மீள்குடியேற்றாமல், சீனியாமோட்டைக் காட்டுக்குள் இறக்கிவிட்டுள்ளனர்.




# சீனியாமோட்டையில் மனிதாபிமானமற்ற முறையில்...?



தமது சொந்தக் கிராமத்தில் மீள்குடியேறவேண்டி கடவுளுக்கு படையல் செய்து பிரார்த்திக்கும் மக்கள்

### நந்தியுடையார் வம்சத்தினரான கேப்பாப்புலவு மக்கள்

இயற்கை. வனப்பும் விவசாயம் மற்றும் மந்தை வளர்ப்பிற்கேற்ற நில

கிணறுகள், பாடசாலை, பொதுவிளையாட்டு மைதானம், முருகன்கோவில், கொட்டடி பிள்ளையார் கோவில், சீனியாமோட்டைக் குளம் போன்றவை

தொகுப்பு:சாருகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பள உயர்வு ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம்

## அரசாங்கத்தின் சுற்றறிக்கைக்கு ப.ஆ.ச.சம்மேளனம் விளக்கம்

அரசாங்கம் நேற்று முன்தினம் அறிவித்துள்ள சம்பள உயர்வு கடந்த வருடம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மூலம் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம் எனவும் அதை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்திற்கு எதிராக அரசாங்கம் பயன்படுத்துகிறது எனவும் அச்சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பள மீளாய்வானது கல்வி சார்ந்த, கல்வி சாரா ஊழியர்களுக்கிடையிலான சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கானது எனவும் இச்சம்மேளனம் தற்போது கோரியுள்ள எந்தவொரு கோரிக்கையுடனும் அது தொடர்பற்றது எனவும் மேற்படி பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி கூறியுள்ளார்.

ஜனவரி 2011 இல் வெளியிடப்பட்ட இந்த சுற்றறிக்கையின்படி சிரேஷ்ட பேராசிரியர் ஒருவரின் அடிப்படை சம்பளம் 16 சதவீதத்தாலும் சிரேஷ்ட விரிவுரையாளரின் சம்பளம் 5 சதவீதத்தாலும் அவதானிப்பின் கீழ் உள்ள சிரேஷ்ட விரிவுரையாளரின் சம்பளம் 3.5 சதவீதத்தாலும் அதிகரிக்கப்பட்டது என அவர் கூறியுள்ளார்.

இதற்கும் நாம் இப்போது முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பளம் 20 சதவீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டுமென பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் கோரியுள்ளது

சம்பள அதிகரிப்பு தொடர்பாக பேசுவதற்காக திறைசேரியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தரவுடன் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கோரியிருந்தோம். ஆனால், எமக்கு இன்னும் அழைப்பு வரவில்லை என தேவசிறி கூறினார். (அ-2)

# இலங்கை, இந்தியாவிலிருந்து விபச்சாரத்திற்காக பெண்கள்

## அதன் முகவர் இந்தியாவில் கைது

(கொழும்பு)

இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து பெண்களை டுபாய்க்கு அனுப்பி அங்கு மேற்கொள்ளப்பட்டு வந்த விபச்சார வர்த்தக செயற்பாடு ஒன்று குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய குற்றப்புலனாய்வுத் துறையினர் இது தொடர்பில் பூனலூரில் சாந்தா என்ற பெண் முகவர் ஒருவரை கைது செய்துள்ளனர். கடந்த 5 வருடங்களில் மாத்திரம் தாம் இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து 120 பெண்களை டுபாய்க்கு அனுப்பியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பல பெண்கள் ஒரு கடவுச்சீட்டை பயன்படுத்தி டுபாய்க்கு அனுப்பப்பட்டுள்ளனர். வேலைவாய்ப்பு என்றுகூறி அனுப்பப்பட்ட பெண்கள் டுபாயில் விபச்சார தொழில்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பெண்களில் பலர் நாடு திரும்பியுள்ள போதும் சமூகத்துக்கு பயந்து பொலிஸில் முறைப்பாடுகளை செய்யவில்லை.

எனினும் இந்தியாவில் நான்கு பெண்கள் பொலிஸில் முறைப்பாட்டை செய்துள்ளனர். இதனையடுத்து இந்த வியாபாரத்துடன் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)



துரையப்பா விளையாட்டரங்கிற்கு பின்னால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் யாழ். பொலிஸ் நிலைய வளாகத்தில் லயன்ஸ் கழகத்தினரால் பயன்தரு மரங்கள் நேற்று முன்தினம் காலை நாட்டப்பட்டதைப் படத்தில் காணலாம். (படம்:- உ.சாளீன்)

# கல்விப் பிரச்சினைகள் உடன் தீர்க்கப்பட வேண்டும்

## மகாநாயக்க தேரர்கள் வலியுறுத்து

உயர் கல்வியமைச்சுக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் இடையிலான முறுகல் நிலைமையை தீர்ப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென மல்வத்தை மற்றும் அஸ்கிரியப்பீடங்களின் வண.மகாநாயக்க தேரர்கள் உயர் கல்வி அமைச்சுக்கான தமது அறிக்கையில் நேற்றைய தினம் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சக்திகளான மாணவர்கள் இக்கட்டனான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதையிட்டு நாம் மிகக் கவலையடைகின்றோம்.

பிரச்சினை தொடங்கி 3 மாதங்களுக்கு மேலாகி விட்டபோதிலும் இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வை வழங்க உயர் கல்வியமைச்சு தவறியுள்ளமை நம்பிக்கை இழப்புக்கு இட்டுச் சென்றுள்ளதெனவும் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

# சிவில் கட்டமைப்புக்களை ஒன்றிணைத்து வன்முறைகளை கட்டுப்படுத்துவோம்

## மனிதநேய அமைப்புக்கள் வலியுறுத்து

சிவில் கட்டமைப்புக்களுக்கு அச்சுறுத்தல் காணப்படுகின்றபோதிலும் அதனை பொருட்படுத்தாது நாம் சிவில் சமூகங்களை ஒன்றிணைத்து பாதுகாப்பு வலையமைப்புக்களை உருவாக்குவதன் மூலம் எம் மண்ணில் இடம்பெறுகின்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் உட்பட அனைத்து வன்முறைகளையும் கட்டுக்குள் கொண்டு வர முடியும் என மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சிறுவர் நலனைப் பேணலும் பெற்றோரின் மனப்பாங்கும் எனும் தொனிப்பொருளில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் மாவட்ட அதிகாரி த.சண்முகநாதன், சிறுவர் பாதுகாப்பு திட்ட நிபுணர் ஜெ.தற்பரன் ஆகியோர் இதில் உரையாற்றியும் சிறுவர் நலன் தொடர்பிலும் விளக்கமளித்திருந்தனர். இதில் அவர்கள் தெரிவித்ததாவது,

போருக்கு பின்னர் சிறுவர் துஷ்பிரயோகம், வன்முறைகள் அதிகரிக் கும் என்பது தவறான கருத்தாகும். நாம் எப்போது எமது பண்டைய கலாசாரங்களில் இருந்து விடுபட்டு தொலைபேசி பாவனை எனும் நவீன கலாசாரத்துக்குள் வந்தோமோ அப்போதே சீரழிவுகள் ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளன.

நாம் இவற்றினை சிவில் கட்டமைப்புகள் மூலம் தான் கட்டுக்குள் கொண்டு வரமுடியும். பல்கலைக்கழக மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் ஏன் அதிகரித்துள்ளது என ஆய்வுகள் செய்ய முடியும். ஆனால், அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. இவ்வாறு ஆய்வுகள் செய்வதன் மூலம் இவை அதிகரிப்பதற்கான காரணங்களை கண்டறிய முடியும். தற்போது எமது பிரதேசத்தில் சிவில் கட்டமைப்புக்களின் தேவை பெரிதும் உணரப்பட்டுள்ளது. இதனை யாழ்.மாவட்ட மனிதவுரிமை இணைப்பாளர் ரி.கனராஜ் சிறப்பாக மேற்கொண்டு வருவதோடு கிளிநொச்சியிலும் சிவில் சமூக அமைப்புஒன்றினையும் உருவாக்கியுள்ளார்.சிவில் சமூகத்தின் உறுப்பினர்களுக்கு தற்போது கூட அச்சுறுத்தல்கள் காணப்பட்டாலும் எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு உழைக்க வேண்டுமென அங்கு தெரிவிக்கப்பட்டது. (அ-4)

# தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இதற்கமைய பாடசாலையில் சித்தி அடைந்த மாணவர்களின் விபரங்கள் அப்பாடசாலை அதிபர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றின் விபரங்கள் வருமாறு,

**யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை**

த.வைஷ்ணவி-187, ச.சக்திதரன்-172, சே.டுசாந்-171, சி.றஜீத்-165, தி.திவானி-165, நி.நிதர்சனா-161, இ.கல்சிகா-152, பா.லிதுர்சனா-148.

**யா/இடைக்காடு மகா வித்தியாலயம், அச்சுவேலி**

ரஞ்சன் தான்சன்-156, ஸ்ரீகாந்தராசா கயரூபன்-155, நந்தகுமார் வினுஜா-153, ஜெயதரன் நிலுக்ஷியா-151. (அ)


## ஆறு மாத காலத்தில் VISA ஒழுங்குகள்

CANADAவுக்கு குடும்பத்துடன் குடியேறுவதற்கான FAMILY VISA எம்மால் பெற்றுக் கொடுக்க முடியும்.



**தகைமைகள்**

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இளமாணி, முதுமாணி பட்டம் பெற்றவர்கள், அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங் கள் மூலமாக DIPLOMA பட்டம் பெற்றவர்கள் ஓராண்டு வேலை அனுபவத்துடன் செல்லமுடியும்.

**NEWZEALAND, AMERICA, LONDON STUDENT VISA**

NEWZEALAND:- (G.C.E. O/L, A/L) தகைமையுடன் மேற்படிப் புக்கு செல்லமுடியும். அங்கு மூன்று ஆண்டுகள் கல்வி கற்ற பின் அந்த நாட்டின் நிரந்தர குடியுரிமையை பெற்றுக் கொள்ள வும் அத்துடன் உங்கள் குடும்ப அங்கத்தவரையும் அழைத்துக் கொள்ள முடியும்.

**CYPRUS/ இத்தாலி**

சைபிரஸ் நாட்டில் உயர்கல்வியை கற்க செல்பவர்கள் அந்நாட்டில் கல்வியை முடித்துக் கொண்டு ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டில் குடியேறுவதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். இத்தாலியில் Work Permit Visa மூலம் குறுகிய காலத்தில் பிரயாணம் மேற்கொள்ளமுடியும்.

**மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு**

மத்திய கிழக்கு நாடுகளான டுபாய், சவுதி அரேபியா, ஓமான், டோகா, கட்டார், குவைத் போன்ற நாடுகளுக்கு ஒரு மாதத்தில் செல்லக் கூடிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

Seaman தொழில் வேலை செய்ய விரும்புபவர்கள் 6 மாத பயிற்சியின் பின் வேலையைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.



(C-1175)

**Rainbow Travels**
இல. 30/2, 3ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
TEL: 0212219596 / 0778980652

**BANK BALANCE / SPONCER**

வெளிநாடுகளில் கல்வி கற்க செல்பவர்களுக்கும்/ Tourist Visa மூலம் செல்பவர்களுக்கும் தேவையான Bank Balance/ Sponcer ஒழுங்குகள் எம் மூலம் செய்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

234

## புதிய மனிதன்!



மிகவும் அடர்ந்த ஒரு காட்டில் கொடூரமான முரட்டுக் கொள்ளையன் ஒருவன் இருந்தான். காட்டு வழியில் செல்பவர்களை வழிமறித்துக் கொள்ளையடிப்பது, கொலை செய்வது போன்ற பாதகங்களையே செய்து வந்தான். அவன் செய்த கொடுமைகளை எண்ணினால் ஏட்டில் அடங்காது. அவனது பெயரைச் சொன்னாலே அனைவரும் அஞ்சி நடுங்கினர். அவனுக்கு மனைவி மக்களும் உண்டு.

முனிவர்கள், சாதுக்கள் போன்றவர்களையும் வழிமறித்து மிகுந்த துன்பங்களுக்குள்ளாக்கினான். அவனது அக்கிரமங்கள் நாளுக்கு நாள் தாங்கவே முடியவில்லை. எந்த உடைமைகளும் இல்லாத தவசிகளான சப்தரிஷிகள் ஏழு பேரையும் இரக்கமற்ற அவன் கட்டிவைத்துவிட்டான்.

அவர்கள் சிக்கித் தவித்த அதே வேளையில் நாரதமுனிவரும் அங்கே வந்து அவனிடம் வகையாக சிக்கிக்கொண்டார். சமயோசிதபுத்தி கொண்ட நாரதர் இந்தப் பாவியிடமிருந்து தானும் சப்தரிஷிகளும் விடுதலையாக வழி என்ன என்று சிறிதுநேரம் சிந்தனை செய்தார்.

அந்த முரடனை மிகவும் அன்புடன் அன்பனே! என்று அழைத்தார். அன்பிற்கு வசியமாகாதவர் எவருமுண்டோ? முரடனான தன்னை நேசமுடன் அழைத்த நாரதரைப் பார்த்தான். அன்பிற்குரிய நண்பனே! துறவியான என்னிடம் உனக்குத் தேவையான எதுவுமே இல்லையே என்பது என் மனதிற்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. என்னிடமிருப்பது இந்த வீணை மட்டும்தான். அதனை வாசிக்க நீ அறியாய். இருப்பினும் இதனை நீ விரும்பினால் பெற்றுக் கொள். அதற்கு முன், அருள்கூர்ந்து எனது சிறிய சந்தேகத்திற்கு மட்டும் பதில் கூறவேண்டும் என்று கல்லும் கரையுமாறு இதமாகக் கூறினார். அவனிடம் ஏதோ அறிந்துகொள்ள விரும்புகிறவர் போல் அந்தக் கொடியவனை கனிவுடன் நோக்கினார்.

அவனுடைய கொடூர முகமும் சற்று மாறியது. முனிவரை நீங்கள் அறியவேண்டியது என்ன? என்று கேட்டான்.

நண்பனே எனக்குள்ள சிறிய சந்தேகம் எத்தனையோ மனிதர்களை வழிமறித்து கொள்ளை



அடிக்கிறாயே எதற்காக? என்றார் நாரதர்.

இதனைக்கேட்ட முரடன் மிகவும் பலமாகச் சிரித்தான். முனிவரே! நல்ல வேடிக்கையான கேள்வி! இது கூடவா தங்களுக்குத் தெரியவில்லை? என் மனைவி மக்களைக் காப்பாற்றுவதற்குத்தான்! என்றான்.

குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கான பொருளீட்ட இந்த வழியில்தான் சம்பாதிக்க வேண்டுமா? இதுபற்றி துறவியான எனக்கு எதுவுமே தெரியாது. வேறு வழியே உலகில் கிடையாதா? என்று ஒன்றும் தெரியாத அப்பாவி போல் கேட்டார் நாரதர்.

என் குடும்பத்தைக் காப்பாற்ற எனக்குத் தெரிந்த ஒரே வழி இது மட்டும்தான். எனது வருமானத்தில் என் குடும்பத்தினருக்குப் பங்குண்டல்லவா! அவர்களைக் காப்பது என் கடமை என்றான் கொள்ளையன்.

அப்படியானால் நீ எதனை சம்பாதித்துக்கொண்டு போனாலும் அவர்கள் பங்கை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? என்று வினவினார் நாரதமுனிவர்.


முனிவரே! அதிலென்ன சந்தேகம்? எதனை நான் கொடுத்தாலும் அவர்கள் அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று முரடன் அழுத்தமாகக் கூறினான்.

நான் சொல்வதை கவனமாகக் கேள். இப்படி நீ கொள்ளையடித்துச் சம்பாதிப்பதால் பெரும் பாவம் உன்னைச் சேர்ந்துள்ளது. அந்தப் பாவத்திலும் பங்குபெற உங்கள் வீட்டினர் மனப்பூர்வமாக சம்மதிப்பார்களா? என்று கேட்டார் நாரதர்.

சுவாமி! அதிலென்ன சந்தேகம்? அவர்கள் என்பால் மிகவும் பாசம் கொண்டவர்கள். நான் எதனைத் தந்தாலும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வார்கள் என்றான் கொள்ளையன். அன்பனே! நீ கூறுவதில் எனக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை. இதனை நீ என் குடும்பத்தினரிடம் கேட்டு வந்து என்னிடம் கூறு என்றார் நாரதமுனிவர்.

இதனைக்கேட்ட முரடனுக்கு மனக்குழப்பம் ஏற்பட்டது. முனிவர் கூறிய சந்தேகத்தை வீட்டாரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டால் என்ன என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது.

உடனே தன்வீட்டை நோக்கி அவன் விரைந்தான். அங்கு சென்றதும் முதலில் அவன் தன் மனைவியிடம் நான் கொடிய பல செயல்கள் செய்ததன்மூலம் பெரும்



பாவத்தைச் சேர்த்து வருகிறேனே! அதிலும் நீ பங்கேற்றுக் கொள்வாய் என்று ஒரு முனிவரிடம் கூறினேன். ஆனால் அதனை அவர் நம்பமறுத்துவிட்டார். நீ பங்கேற்பாய் அல்லவா? என்று கேட்டான்.

அவள் உடனே உனது பாவத்தில் நான் எதற்காகப் பங்கேற்க வேண்டும்? முனிவர் சந்தேகம் சரிதான். எனக்குத் தாலி கட்டிய கணவன் நீ. என்னையும் நமது பிள்ளைகளையும் காக்க வேண்டியது உனது கடமை.

நீ எப்படிச் சம்பாதித்துக் கொண்டு வந்தாலும் எனக்குக் கவலை இல்லை. அதனை வைத்து குடும்பத்தைக் காப்பதே எனது வேலை. உனது பாவத்தில் நானும் பங்கு கொள்ள வேண்டிய அவசியமே எனக்கு இல்லை. உன் பாவத்தை நீதான் ஏற்கவேண்டும் என்று அழுத்தமாகப் பதிலளித்தாள். இதனைக் கேட்ட திருடன் மிகவும் அதிர்ந்து போனான். இதே கேள்வியை தன் பிள்ளைகளிடமும் கேட்டான். அவர்களும் முகத்திலடித்தது போல் பங்கு பெறமுடியாது என்று உறுதியாகக் கூறிவிட்டனர்.

மிகுந்தவேதனையும் ஏமாற்றமும் அடைந்த முரடன் அதிர்ச்சியுடனும் விரக்தியுடனும் வீட்டை விட்டு வெளியேறி முனிவர் இருக்குமிடத்திற்கு விரைந்தான். முரடன் மிகவும் வேதனையுடன் இருப்பதைக் கண்ட நாரதர் அன்பனே! என்ன நடந்தது என்று வினவினார்.

எப்படியெல்லாம் கொடுமைகள் செய்து எனது வீட்டாரைக் காப்பாற்றினேன். அந்த நன்றிகெட்ட ஜென்மங்கள் என் பாவத்தில் பங்குபெற மறுத்து விட்டன என்று கூறிக் கண் கலங்கினான்.

இப்போது அவனது கல்மனம் கனியாக மாறியிருந்தது. சுவாமி! இனி நான் என்ன செய்ய வேண்டும்? எனக்கு உலக ஆசையே அடியோடு வெறுத்துவிட்டது. எனது தீய்வழிகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகிவிட்டன. நான் இப்போது புதிய மனிதன். என்னை தங்கள் சீடனாக ஏற்று அருள்புரிய வேண்டும் என்று கூறி முனிவ்ரின் கால்களில் விழுந்தான்.

அன்பனே! நீ யார் யாரைக் காப்பாற்ற தவறான வழிகளில் நடந்தாயோ அவர்களே நன்றி மறந்துவிட்டார்கள். பழையனவற்றை முற்றிலும் மறந்துவிடு உன்னால் சிறைபிடிக்கப்பட்ட சப்தரிஷிகளையும் மற்றவர்களையும் விடுவித்துவிடு என்றார் நாரதர்.

முரடனும் அதன்படியே விடுவித்தான். நான் பாவங்களிலிருந்து விடுபட தாங்கள் ஒரு வழியைக் கூறவேண்டும் என்று வேண்டி நின்றான். அதற்கு நாரத முனிவர் *ராம்ராம்* என்று தொடர்ந்து கூறி பிரார்த்தனை செய் என்றார்.

அவர் கூறியபடியே திருந்திய அவன் ராம் ராம் என்று கூறிக் கொண்டே தியானத்தில் ஈடுபட்டு அமர்ந்தான்.

அவனைச் சுற்றிக் கரையான் புற்று உருவானது. அப்புற்றை ***வால்மீகம்*** என்று கூறுவர். அச்சொல்லே அவனது பெயராகி ***வால்மீகி*** என்றானது.

கொள்ளைக்காரனாக இருந்து நாரதமுனிவரின் உபதேசத்தால் பக்தனாக மாறியது யார் தெரியுமா? அவர்தான் இராமகாவியத்தை முதன் முதல் எழுதிய வால்மீகி முனிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்கல்விக்கான எமது உணர்வுகளை செயல் மூலம் வெளிப்படுத்தியுள்ளோம்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்விச்சமூகம் உட்பட முழுச் சமூகமுமே திரண்டு வந்து பல்கலைக்கழக சிரமதானத்தில் தமது அபிலாசைகளை வெளிக்காட்டியிருக்கின்றன என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அறிவியல் நகர்ப்பகுதியில் அமையவுள்ள விவசாயபீடம் பொறியியற் பீடம் ஆகியவற்றின் வளாகப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிரமதான நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

இந்த பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் இந்த மக்களின் முன்னேற்றத்திற்காகவும் இந்த பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காகவும் இந்த இரண்டு பீடங்களும் விரைவில் இந்த மண்ணில் ஆரம்பிக்க வேண்டும் என்ற செய்தியினையும் இந்த மாவட்டம் இன்று வெளிப்படுத்தியுள்ளது.

ஏற்கனவே கிளிநொச்சியில் விவசாயபீடம் இயங்கி வந்தது. பின்னர் யுத்தம் காரணமாக அது யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டது.

ஆனால் யுத்தம் முடிவுக்கு வந்து மூன்று வருடங்கள் கடந்துவிட்ட பின்னும் இன்னும் விவசாயபீடம் கிளிநொச்சிக்கு வராமை துரதிர்ஷ்டவசமானது.

அதனை விட யாழ்.பல்கலைக்கழகத்திற்கான பொறியியல் பீடம் உருவாக்கப்பட வேண் டும் என்பது எமது மக்களின் 35 வருட காலக்கனவு. அந்த கனவு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் கிட்டியுள்ளது. தற்பொழுது உயர்கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பன யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் மற்றும் பேராசிரியர்களை அழைத்து விரைவாக இந்த வருடமே பொறியியல் பீடத்தை இங்கு அரம்பிக்கும் படி கேட்டிருக்கின்றார்கள். இந்திய அரசும்- உதவிகளை செய்ய முன்வந்துள்ளது.

ஆகவே எங்களுக்கு பெரும் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இந்த விசாலமான நிலப்பரப்பில் கிட்டத்தட்ட 600 ஏக்கர் காணியில் இந்த இரண்டு பீடங்களும் ஆரம்பிக்கவுள்ளமை கிளிநொச்சியின் எதிர்கால வளர்ச்சியின் ஆதாரமாக காணப்படுகிறது என்றார். (அ-2)

# கட்டுநாயக்கவில் இரத்த பரிசோதனை

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மலேரியா காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கான இலவச இரத்தப் பரிசோதனை சிகிச்சையளிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விமான நிலைய சுகாதாரப்பிரிவினருக்கு இது தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளதாக மலேரியா ஒழிப்பு பிரிவின் பணிப்பாளரும் விசேட வைத்திய நிபுணருமான சரத் தெனியகே தெரிவித்தார்.

குறிப்பாக மலேரியா காய்ச்சல் பரவியுள்ள நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகின்ற மற்றும் அந்த நாடுகளுக்கு பயணமாகின்ற மக்களுக்கு இந்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் மலேரியா காய்ச்சலால் பீடிக்கப்பட்ட சுமார் 20 பேர் மாத்திரமே பதிவானதுடன் வெளிநாடுகளில் இருந்து வருகின்றவர்களில் 55 பேர் பதிவானதாகவும் அவர் கூறினார். (அ-2)

# கொழும்பை அபிவிருத்தி செய்ய ஏழை மக்கள் ஒன்றிக்கப்படுவர்

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

குறைந்த வருமானம் பெறுகின்றவர்களை பொருட்படுத்தாமல் கொழும்பு நகரத்தை அபிவிருத்தி செய்ய முடியாது என நிர்மாணத்துறை பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

குடியிருப்புக்களின் சமூகத் தலைவர்களை கௌரவிப்பதற்காக கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு இந்த வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது கொழும்பிலுள்ள 200 குடியிருப்புக்களை சேர்ந்த ஆயிரம் சமூகத் தலைவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.


பொருளாதார ரீதியில் புதிதாக கட்டியெழுப்பப்படும் நாடாக இலங்கை மாறியுள்ளது என்றும் ஏழை மக்களையும் ஒன்றிணைத்து கட்டியெழுப்பப்படும் நகரமாக கொழும்பு மாற்றப்படும் பட்சத்தில் நாடு முன்னோக்கிச் செல்லும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)





யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற்ற விஞ்ஞான கல்விக்கண்காட்சி நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஓய்வுபெற்ற கணித பாடஆசிரிய ஆலோசகர் இ.இராஜசேகரம் மற்றும் அதிபர் உள்ளிட்ட விருந்தினர்களும் மாணவர்களும் கண்காட்சியினை பார்வையிடுவதை படங்களில் காணலாம்.

# தேசிய மட்டத்தில் முதலாமிடம்



(கரவெட்டி)

138 ஆவது சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட அஞ்சல் உத்தியோகத்தர்களுக்கான மாகாணம் மற்றும் தேசிய மட்ட பேச்சுப் போட்டிகளில் கரவெட்டி தபாலதிபர் அ.அருளானந்தசோதி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (அ-2-24)

# எவரெஸ்டை சுற்றி பார்க்க சென்ற சுற்றுலா பயணிகள் 19 பேர் பலி

(நேபாளம்)

நேபாள நாட்டில் அமைந்துள்ள எவரெஸ்ட் சிகரத்தை சுற்றிப்பார்க்க சென்ற 7 பிரித்தானியர்கள் உட்பட 19 பேர் விமான விபத்தில் உடல் கருகி பலியாகினர்.

எவரெஸ்ட் சிகரம் அருகே உள்ள லுக்லா என்ற பகுதிக்கு புறப்பட்ட சீதா ஏர் விமானம் மனோகரா நதி அருகே வெடித்து சிதறியது.

இந்த விமானத்தில் பிரித்தானியாவை சேர்ந்த 7 பேரும் சீனாவை சேர்ந்த 5 பேரும் ஏனையோர் நேபாள நாட்டை சேர்ந்தவர்கள் உயிரிழந்தனர்.

இந்த சிறிய ரக விமானம் புறப்பட்டு ஒரு கிலோமீற்றர் தொலைவுக்குள் விபத்தில் சிக்கியதாகவும் இதில் இருந்த அனைவரும் எரிந்து சாம்பலாகியுள்ளனர்.




சம்பவ இடத்திற்கு இராணுவ மீட்பு படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேபாளத்தை பொறுத்தவரை இங்கு அடிக்கடி விமான விபத்து நடந்து வருவதற்கு மோசமான வானிலையே காரணமாக இருந்தாலும் இன்று நடந்த விபத்து விமான கோறு காரணமாக நடந்திருக்கிறது.

கடந்த 2 ஆண்டுக்குள் நேபாளத்தில் இதுவரை 6 விமான விபத்துக்கள் நடந்திருக்கிறது குறிப்பிடத்[illegible]நக்கது. (அ-2)


Consulate General of india, Jaffna invites application for its indian corner for following posts on temporary basis:

1. Clerk - 01 (Full day)

2. Teachers in the following disciplines for conducting classes in the evenings on hourly basis each month upto 10 hours only.

(a) Indian classical dances such as kathak,Odissi etc.

(b) Instrumental music in flute/yarl/Tabla/Mridangam/other Indian musical instruments

(c) Yoga

(d) Hindi

Interested candidates may send their bio-data with teaching experience for music/ dance teachers alongwith their photograph, photocopies of their certificates and National Identiy card/ passport copy in a closed cover addressed to Head of Chancery, Consulate General of India, 280, palaly Road, Jaffna. The last date for receipt of applications is **10 October 2012**

Head of chancery
consulate General of India, Jaffna

C/1197


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் பகுதியில் ஆயுதங்கள் பெருமளவில் மீட்பு

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தம் முடிவுற்ற இடமான வெள்ள முள்ளிவாய்க்கால் உட்பட புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் பெருமளவிலான ஆயுதங்கள், புலிகளின் சீருடைகள், தளபாடங்கள், செய்மதி தொலைபேசிகள் என்பன மீட்கப்பட்டுக் கொண்டிருப்பதாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீ.குகனேசன் தெரிவித்தார்.

கடந்த 25 ஆம் திகதி இறுதிக்கட்ட போர் இடம்பெற்ற வெள்ள முள்ளிவாய்க்காலில் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கையின்போது நிலத்தினுள் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பளை அம்மன் கோவிலில் தமிழீழ விடுதலைப்புலிகளால் கைவிடப்பட்ட ஆயுதங்கள், 0.56 மில்லிமீற்றர் சிலிண்டர் ஒன்றும், 06.377 மில்லிமீற்றர் துப்பாக்கி 4 உம் புலிகளின் சீருடைகள் என்பனவும் மீட்கப்பட்டு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் வவுனியாவிலும் கணேஷபுரத்திலும் கடந்த 22 ஆம் திகதி வவுனியாவிலும் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. (அ-4)

# யாழ். மருத்துவபீட மாணவர்கள் ஒன்றியம் அமைக்கத்தேவையில்லை

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மருத்துவபீட மாணவர்களுக்கான ஒன்றியம் தேவையில்லை. அதனால் தேவையில்லாத பிரச்சினைகளே உருவாகும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கென குவைத் அரசின் 65 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட இணை மருத்துவ விஞ்ஞான அலகுக்கான கட்டடத்தொகுதி திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உயர்கல்வி அமைச்சர், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் செல்வி. வசந்தி அரசரட்ணம், மருத்துவபீட பீடாதிபதி வைத்தியர் பாலகுமார் மற்றும் மருத்துவபீட மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது மருத்துவபீட மாணவர்களினால் ஒன்றியம் அமைப்பதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதன்போது உயர்கல்வி அமைச்சரினால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இந்தக்கலந்துரையாடலின்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, உயர்கல்வி அமைச்சின் பிரதி அமைச்சர் நந்தி மித்திரா ஏக்கநாயக்க உள்ளிட்டவர்களும் பங்கு கொண்டனர். (அ-6)

# இலங்கையின் வன்னி மாவட்டங்கள் ஒரு கையேடு அறிமுகவிழா

(பூந்தோட்டம்)

இலங்கையில் வன்னி மாவட்டங்கள் ஒரு கையேடு என்ற நூலின் அறிமுக விழா இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நூலின் தமிழாக்கக்குழு தலைவர் க.ஐயம்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வரலாற்றுத்துறை பேராசிரியர். சி. பத்மநாதன், கௌரவவிருந்தினர்களாக வவுனியா மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர்களான கே.சி.லோகேஸ்வரன், ரி. லங்காநேசன், சி. தில்லைநடராஜா, க. கணேஸ் மற்றும் முன்னாள் மாவட்ட அபிவிருத்தி சபை தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான மு.சிற்றம்பலம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன், வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன், வைத்தியகலாநிதி ப. சத்தியலிங்கம், வவுனியா வடக்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம், செட்டிக்குளம் பிரதேச செயலாளர் என். கமலதாசன், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் எம்.எஸ். ஜானக மற்றும் சுத்தானந்த, இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர் நா. சேனாதிராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் அறிமுகவுரையினை தமிழ்மணி அகளங்கள் நிகழ்த்துவார். (அ-2-266)

# தமிழ் மக்கள் மீதான அழிப்பை இந்தியா கண்டுகொள்ளவில்லை

## இந்தியாவின் மூத்த ஊடகவியலாளர் வருத்தம்

ஒட்டுமொத்தத் தமிழ் இனமே அழியும் போது தட்டிக்கேட்க வேண்டிய இந்தியா, இலங்கை எங்கள் நட்பு நாடு என மார்தட்டித் திரிந்தது ஒரு வரலாற்றுப் பிழை என்று இந்தியாவின் மூத்த ஊடகவியலாளர் குல்தீப் நய்யார் தெரிவித்துள்ளார்.

இலங்கைப்போர் இந்த நூற்றாண்டில் மாபெரும் சோகம் என்று இங்கிலாந்து அலைவரிசைகள் சொல்கின்றன. ஆனால்,பக்கத்து நாடான இந்திய ஊடகங்கள்மௌனித்தது ஏன் என சனல் 4 என்னிடம் கேட்ட கேள்விக்கு இன்றுவரை என்னால் சரியான பதிலைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நம்முடைய மௌனமும் மறுதலிப்புந்தான் இலட்சக் கணக்கான அப்பாவி மக்களை, கர்ப்பிணிப் பெண்களை, பிஞ்சுக் குழந்தைகளைக் கொன்றிருக்கிறது என்ற குற்ற உணர்வுமனச்சாட்சி கொண்ட ஒவ்வொரு பத்திரிகை ஆசிரியனையும் ஆட்சியாளனையும் காலம் முழுக்க உறுத்திக் கொண்டே இருக்கும்.

போரின்போது தமிழர்களிடையே எழுந்த எழுச்சியை இந்தியா முழுக்கப் பரப்ப தமிழக அரசியல்வாதிகள் தவறிவிட்டதாகவே நினைக்கின்றேன். பாகிஸ்தான், சீனா, ரஷ்யா போன்ற பல நாடுகளின் உதவியோடு ஒட்டுமொத்தத் தமிழினத்தையே கூண்டோடு அழித்தொழித்தது இலங்கை அரசு. இதைத் தட்டிக்கேட்க வேண்டிய இந்தியா, இலங்கை எங்கள் நட்பு நாடு என மார்தட்டித் திரிந்தது ஒரு வரலாற்றுப்பிழை. இது போதாது என இப்போது இலங்கை இராணுவ வீரர்களுக்குப் பயிற்சியும் அளித்து வருகிறது. சீனாவையும் பாகிஸ்தானையும் சமனாக வைத்திருக்க இலங்கைத் தமிழ்மக்களுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடிக்கும் இந்தியாவின் நிலைப்பாடு, மிகப் பெரிய ஆபத்தை விளைவிக்கும்.

இலங்கையின் குடிமக்களாகிய தமிழர்களுக்கு அந்த நாட்டில் சுய மரியாதையுடன் வாழும் உரிமையும் சுதந்திரமும் மறுக்கப்படுகிறது. அதைத் தமிழர்கள் கேட்கும்போது காலங்காலமாக காட்டுமிராண்டித்தனமான வன்முறைக்கு ஆளாகிறார்கள். அதனால் தான் விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் உண்மையிலே பல்வேறு தியாகங்களைச் செய்த புலிகள் தோற்றுப் போனதில் தனிப்பட்ட முறையில் எனக்கும் வருத்தம் தான். (குரல் தளதளக்கிறது) ஏனென்றால் அவர்கள் நம் மக்கள் என்றார். (அ-2)

# சிறுவர் தின நிகழ்வு

வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவன ஒன்றியத்துடன் இணைந்து உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒக்டோபர் மாதம் முழுவதும் வவுனியா மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் உலக சிறுவர் தினத்தினை நடாத்த தீர்மானித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி வவுனியா பொது வைத்தியசாலையில் இடம்பெறவுள்ள ஆரம்ப நிகழ்வில் சிறுவர் உரிமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான காணொளி காட்சிப்படுத்தலும், அறிவூட்டலும், வாக்கெடுப்பு, சேவை வழங்குநர் விபரம் என்பன நடைபெறவுள்ளதாக மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரி த. செல்வகுமார் அறிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து மக்கள்கூடும் இடங்கள் மற்றும் கிராமங்கள் ஆகியவற்றில் மேற்படி மாதம் முழுவதும் இந்நிகழ்வானது நடைபெறவுள்ளது. அத்துடன் ஒக்டோபர் 31 ஆம் தகிதி புதன் கிழமை அன்று மகஜர் கையளிக்கும் நிகழ்வு மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ-2-266)



தேசிய மட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் 15 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான கபடிப்போட்டியில் யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இவ்வணியினருடன் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வட பிராந்திய ஆணையாளர் எஸ்.எல். டீன் மற்றும் பா[illegible] அமர்ந்திருப் பதைப் படத்தில் காணலாம். ([illegible])

# திருச்சியில் கைதான தமீம் அன்சாரி காய்கறி வியாபாரம் செய்பவர்

## தமிழ்நாடு முஸ்லிம் மு.க. தெரிவிப்பு

இந்திய இராணுவ இரகசியங்களுடன் இலங்கைக்கு தப்பிச் செல்ல முயன்றார் என்ற குற்றச்சாட்டில் திருச்சி விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட தமீம் அன்சாரி என்ற இளைஞர் ஒரு புகைப்படக் கலைஞராவார்.

அவர்இலங்கையில் காய்கறி வியாபாரம் தான் செய்துவருகிறார்.

அவர் தீவிரவாதியோ அல்லது அந்நிய கைக்கூலியோ அல்ல என்று தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கழகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 26 ஆம் திகதி அன்று த.மு.மு.க. வின் தலைமையில் நிர்வாகக்குழுக் கூட்டத்தில் தற்போது தமிழகத்தில் பரபரப்பாக பேசப்பட்டுவரும் [illegible]பட்டினம் தமீம் அன்சாரி வழக்கு குறித்தும் விவாதிக்கப்பட்டது.

தமீம் அன்சாரி, ஒரு புகைப்படக் கலைஞர் என்பதும், குறும்படம் இயக்கும் எண்ணத்துடன் வியாபாரம் செய்துள்ளார் என்பதும் மட்டுமே உண்மை. இந்திய பொலிசார் கூறுவதுபோல அவர் தீவிரவாதியோ, அந்நிய கைக்கூலியோ இல்லை என்பதும் தெரிய வந்துள்ளது.

இத்தகைய செயற்பாட்டைக் கண்டித்து தமிழகம் முழுவதும் கண்டன சுவரொட்டிகளை ஒட்டுவது என்றும் விரைவில் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தி கியூபிரிவு பொலிசாரின் சதியை அம்பலப்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமீம் அன்சாரியை திருச்சியில் வைத்து கைது செய்த பொலிசார் அவர் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்திற்கு இந்திய இராணுவ இரகசியங்களை கொடுக்க முயன்றதாக குற்றம் சாட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்புகொண்ட நெஞ்சம் எப்போதும் இளைமையானது.

–டேவிஸ்யூம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மகனே! பாதை மோசம் பயணம் கவனம்

கடிதம் எழுதும் கலாசாரம் என்று வழக்கொழிந்ததோ அன்று உறவும் பாசமும் அறத் தொடங்கியது.

முன்பெல்லாம் கடிதத்திற்கு இருந்த மதிப்பு சொல்லுந்தரமன்று.

தாய் மகனுக்கு எழுதும் கடிதம்; தந்தை தன் குடும்பத்திற்கு வரையும் கடிதம் என உறவு முறைக் கடிதங்கள் ஆனந்தக் கண்ணீர் விடச் செய்தன.

ஒரு தாய் தன்பிள்ளை மீது கொண்ட பாசத்தை –அன்பை கடிதத்தில் வரையும்போது அதனை வாசிக்கும் பிள்ளையின் உள்ளம் கல்லும்.

பெற்ற மனம் பித்தும் பிள்ளை மனம் கல்லும் என்ற பழமொழியின் கருத்தாழம் இதனைத் ...ன் சுட்டிநிற்கின்றது.

...நன் பெற்றோர் எழுதிய கடிதத்தை வாசிக்கும் பிள்ளை, அவர்களை நினைத்து மனம்நெக்குருகுவான். இந்நெக்குருகலைத்தான் பிள்ளை மனம் கல்லும் என்கிறார்கள்.

எனினும் நாங்கள் பிள்ளை மனம் கல்லு என்று மட்டந்தட்டி விட்டோம்.

பரவாயில்லை, பிள்ளை மனம் கல்லுத்தானா என்று நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் இதயத்தை தொட்டுக் கேட்டால் அந்தப் பழமொழியின் யதார்த்தம் புரியும்.

திருமுகம் என்று அழைக்கப்பட்ட கடிதம், இன்று தொலைபேசியாக, தொலைநகலாக, மின்னஞ்சலாக மாறி, ஏதோ எல்லாம் நடக்கிறது; பரவாயில்லை.

...ிராமத்தில் இருக்கின்ற தாய் ஒருவர் நகரத்தில் ...டிக்கின்ற தன் மகனுக்கு கடிதம் எழுதினார்.

அன்பு மகனே! விடிந்தால் பொழுதுபட்டால் உன் நினைப்புத்தான். உன் சுகத்திற்காக என் கந்தப்பெருமானை வேண்டாத நாளில்லை.

கவனம் மகனே! யாழ்ப்பாண வீதியெங்கும் திருத்த வேலை நடக்கிறதாம். திருத்த வேலைக்காக பாலங்கள் திறந்துவிடப்பட்டுள்ளன என்று அறிந்தேன். மாரிகாலம் திறந்த பாலத்தில் மழைநீர் தேங்கிநின்றால் எப்படியிருக்கும் நிலைமை?

உன் இருப்பிடத்திற்கு அருகில் இருக்கக்கூடிய சின்னஞ்சிறுசுகளுக்கும் சொல்லிவை மகனே, குன்றுகுழிகளைப் பார்த்து நடக்கும்படி.

பாவங்கள் அறியாப் பருவம், பாலம் எது? வீதி எது? என்று தெரியாமல் காலை வைத்து விடுங்கள். இந்தப் பயங்கரம் ஒருபுறம். மறுபுறத்தில் நாய்களின் அட்டகாசம் பெரிய மோசமாம். பட்டப் பகலில் வீதியில் இறங்கி பத்துப் பதினைந்து ஆண் நாய்கள் சேர்ந்து பெண் நாயை கலைக்கின்றனவாம். அதுகளின் இன்பத்தில எங்களுக்குத் துன்பம் வந்திடும்.

கட்டாக்காலி நாய்களை அழிக்கக்கூடாதாமே. ஏதோ வேகங்கொண்ட ஆண் நாய்கள் வீதிக்கு குறுக்க பாயும். நீயும் மோட்டார் சைக்கிளை வேகமாக ஓடுகிறவன். மோனே! ஒருபுறம் வீதித் திருத்தம்; மறுபுறம் தெருநாய்களின் திருமணத் திருவிழா. கவனம் உன்னை நம்பித்தான் எங்கட குடும்பம்.

# அதிகாரங்களை கோரிய மு.க. இன்று விட்டுக் கொடுக்கிறது

## முஸ்லிம் இடதுசாரி முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

திவிநெகும சட்டமூலம் மேல் மாகாண சபைக்கு கொண்டு வரப்பட்ட போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளது.

இதன்மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் இணைந்து மேற்கொண்டிருக்கும் தேனிலவுப் பயணத்தில் இறுக்கமான நிலை மீண்டும் உருவாகியுள்ளது என முஸ்லிம் இடது சாரி முன்னணியின் பொதுச் செயலாளர் எம்.பைசால் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரம் வேண்டும் என்று கூறிவந்த முஸ்லிம் காங்கிரஸ் இன்று மாகாண சபை அதிகாரங்களை தாரை வார்ப்பதற்கு தயாராகியுள்ளது.

திவி நெகும சட்ட மூலத்திற்கான ஆதரவையளிக்கும் இணக்கப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. தென்னிலங்கையில் ஆட்சியாளர்களுக்கு எதிராக பல போராட்டங்கள் மேற்கிளம்பியுள்ளன.

பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம், விரிவுரையாளர் போராட்டம் என்பன உச்சநிலையில் உள்ளன. ஏற்கெனவே விவசாயிகளும் போராட்டக் களத்தில் உள்ளன.

விரைவில் அரச, தனியார் துறைகள் சார்ந்த தொழிலாளர்களும் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

பேரினவாத தளம் பல விரிசல்களைக் கொண்டு காணப்படுகிறது. மிகப்பல வீனமான நிலைக்கு ஆட்சித்தளம் சென்று கொண்டிருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுக்க முனைகிறது.

அமரர் அஸ்ரப்பின் தீர்க்க தரிசனமான கொள்கைகளுக்கு இன்றைய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைகள் துரோகம் செய்கின்றன என்பதே உண்மையாகும். (எ-11)

# கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நேற்றுப் பதவிப் பிரமாணம்

(திருகோணமலை)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கான பதவியேற்புவிழா நேற்று திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இப்பதவியேற்பு விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், வடக்கு மற்றும் கிழக்கின் த.தே.கூ. பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சி.சிறிதரன், அரியநேத்திரன், சுமந்திரன், வினோநோகராதலிங்கம், சரவணபவன், யோகேஸ்வரன், பொன்.செல்வராஜா, சிவசக்தி ஆனந்தன் உட்பட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காலை 7.30 மணியளவில் சர்வமதப் பிரார்த்தனையுடன் ஆரம்பமான இப் பதவியேற்பு வைபவமானது விழாவின் கதாநாயகர்களை ஊர்வலமாக நகரசபை மண்டபத்தை நோக்கி அழைத்துச் சென்று தமிழர்களுக்கே உரிய பாரம்பரிய நிகழ்வான ஆராத்தி எடுத்ததுடன் ஆரம்பமாகி தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது.

இவற்றினைத் தொடர்ந்து இடம்பெற்ற வரவேற்புரை, தலைமையுரை என்பனவற்றை அடுத்து கட்சியின் தலைவரான இரா.சம்பந்தன் மற்றும் பொதுச் செயலாளரான மாவை சேனாதிராஜா முன்னிலையில் கிழக்கின் மாகாண சபை உறுப்பினர்களாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட 11பேரும் தமது உறுதிமொழியை வழங்கி பதவியைப் பொறுப்பேற்றனர்.


தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்கள் பல தடங்கல்களுக்கும், இன்னல்களுக்கும் மத்தியில் நிதானமாக சிந்தித்து தமக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்து மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் ஒன்றிணைந்து செயற்படுவோம் எனத் தெரிவித்ததுடன், அந்நிய சக்திகளின் பேரம் பேசுதல்களுக்கு சோரம் போக மாட்டோம் எனவும் தெரிவித்தனர். (எ-11)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.லயன்ஸ் கழகத்தில் நடத்தப்படும் இலவச மருத்துவ முகாம் நாளை காலை 9 மணிக்கு சேந்தாங்குளம், வசந்தபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும். பொது வைத்தியம், இரத்த அழுத்தம், நீரிழிவு பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெறும். விசேடமாக கண்பரிசோதனை செய்து கண்ணாடி இலவசமாக வழங்கப்படும் மேற்படி நிகழ்விற்கு லயன்ஸ் கழகத்தின் பிராந்திய தலைவர் லயன் சற்குணதேவன் பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பிப்பார். (எ-11)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



நானே பரஞ்ஜோதி, பரமபதம், பரமமித்ரன், பரமஞானம், பரமபுத்தி, பரம அன்பு, பரம மூலாதாரம், பரம ஸ்ருஷ்டிகர்த்தா, பரம பவித்தரம், நிலைத்த அனைத்திலும் உள்ளிருந்து ஆள்பவன், நானே ஈஸ்வரா, நான் யுகந்தோறும் எனது படைப்பை மேம்படுத்துவதற்கென எனது இராச்சியத்திலிருந்து உயர் ஆன்மாக்களை அனுப்புகிறேன். நான் சித். எனது தேகமே சத். எனது சக்தியே பேரின்பத் தன்மையுடைய ஆனந்தம். நானே சச்சிதானந்தப் பரப்பிரம்மன். என்னை விட உயர்ந்ததோ, உயர்ந்தவரோ அல்லது எனக்குச் சமமானதோ, சமமானவரோ இல்லை.

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கைலாசப்பிள்ளையார் கோவிலடியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இலவசமருத்துவமுகாம் நடைபெறும். அனைவரையும் கலந்து கொண்டு பயன் அடையுமாறு கேட்கப்படுகின்றனர். (எ-2)

## கடவுள் சுவாமிகள் மகாசமாதிக் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 33ஆவது சமாதிக் குருபூசை நாளை ஞாயிற்றுக்கிழமை மறவன்புலோவிலுள்ள சுவாமிகளின் சமாதி நிலையத்தில் கொண்டாடப்படும்.

அன்றையதினம் பூஜைகளும், ஆராதனைகளும், சொற்பொழிவுகளும், மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. (எ)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உண்மையைப் பின்பற்று



தெய்வீகம் எப்போதும் நமக்குள் இருந்து கொண்டிருக்கிறது. அதை விழிப்படையச் செய்வதே நமது கடமை.

பொதுநலத்துடன் செய்யும் சேவை அனைத் தும் புனிதமானதுதான். அர்ப்பணிப்பு உணர்வு டன் செய்யும்போது அது மேலும் புனிதமாகி விடு கிறது.

விக்கிரகத்தை வழிபடுகிறோம் என்பதற்காக கடவுளே விக்கிரகம்தான் என்று எண்ணிவிடாதீர்கள்.

நம்மிடமுள்ள தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி பிறரும் தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்குத் துணை செய்வதாகும்.

அடக்கம் இல்லாத மனமும் அறநெறியற்ற வாழ்வும் நம்மைக் கீழ் நோக்கி இழுத்துச் செல்லும். அடக்கமுள்ள மனமோ சுதந்திரமாக இருக் கும்.


யாருடைய நெஞ்சம் ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ, அவரே மகாத்மா. தூய்மைமிக்க அவர் கடவுளுக்கு மிக நெருக்கமானவ ராகத் திகழ்வார்.

உண்மை எங்கு இழுத்துச் சென்றாலும் அதைப் பின்பற்றிச் செல்லுங்கள். கோழையாகவும் வேடதாரியாகவும் இருக்காதீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# விசேட தேவையுடைய மாணவர்களின் மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியில் யாழ். கோண்டாவில் இந்து மகா வித்தியாலய மாணவர்கள் சாதனை படைத்துள்ளார்கள்.




ந.கிருஜன் குண்டெறிதலிலும் 100 மீற்றர் ஓட்டத்திலும் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார்.




அலின் ஆஷிகா பந்தெறிதலில் முதலாம் இடத்தையும் 50 மீற்றர் ஓட்டத்தில் 2ஆம் இத்தையும் பெற்றுக்கொண்டார்.

# ஊரெழு றோயலை வீழ்த்தியது கலட்டி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கலட்டி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணிக்கும் கலட்டி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் ஆட்ட நேர நிறைவில் தலா ஒரு கோல் பெற்றதால் ஆட்டம் சமநிலையடைந்தது. எனவே, வெற்றி, தோல்வி தீர்மானிக்கும் பனால்டி உதை வழங்கப்பட்டது. இதனை பயன்படுத்திய கலட்டி 5:4 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

# ஹொக்கியில் யாழ்.பல்கலை. வெற்றி

யாழ்ப்பாணம் ஹொக்கிச் சங்கம் யாழ்.மாவட்ட ஹொக்கி அணிகளுக்கிடையே நடத்திய ஹொக்கிப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஹொக்கி அணி மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஹொக்கி அணியும் வட்டுக்கோட்டை ஒல்ட்கோல்ட்ஸ் ஹொக்கி அணியும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஹொக்கிப்போட்டியில் மோதின.

பல்கலைக்கழக அணி ஒரு கோலைப்பெற்று முன்னணியில் இருந்த நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகி 5 நிமிடத்தில் ஒல்ட்கோல்ட்ஸ் அணி ஒரு பந்தை அடித்து கோல் பெற்ற போதிலும் அதனை கோல் இல்லையென மத்தியஸ்தர் அறிவித்ததைத் தொடர்ந்து போட்டியிலிருந்து ஒல்ட்கோல்ட்ஸ் அணி வெளி நடப்புச் செய்த நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

யாழ்.ஸ்ரார் அணி இரண்டாம் இடத்தினையும் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

# மயூரனின் அதிரடியில் மகாஜனா வெற்றி

(யாழ்ப்பாணம்)



உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் 19 வயதுப்பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டத்தில் கடந்த வாரம் நடைபெற்ற போட்டியொன்றில் மகாஜனா கல்லூரியியும் புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதின. போட்டி ஆரம்பித்தவுடன் இரு அணிகளும் கோல் அடிக்கும் முனைப்புடன் விளையாடின. போட்டியின் 25 ஆவது நிமிடத்தில் மகாஜனா கல்லூரி அணி வீரன் மயூரன் சிறப்பாக ஒரு கோலைப்பெற மகாஜனாக்கல்லூரி அணி முன்னிலை பெற்றது.

போட்டியின் முதலாவது பாதியில் மகாஜனாக்கல்லூரி அணி 1:0 என்ற அடிப்படையில் முன்னிலையிலிருந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில். புனித ஹென்றியரசர் கல்லூரி அணி வீரர்கள் கோல் அடிப்பதற்கு முயன்ற போதும் மகாஜனாவின் வீரர்கள் சிறப்பாக செயற்பட்டு முயற்சிகளை தடுத்தனர். போட்டியின் 70 ஆவது நிமிடத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரி அணிக்கு பனால்டி வாய்ப்பு கிடைத்தது. ஆனால், இவ்வாய்ப்பை மகாஜனாக்கல்லூரி அணியின் கோல்காப்பாளர் சிறப்பாக செயற்பட்டு அதனை தடுத்து அணியின் வெற்றிக்கு துணை புரிந்தார். இறுதியில் மகாஜனாக்கல்லூரி அணியினர் 1:0 என்ற கோல்கணக்கில் புனித ஹென்றியரசர் கல்லூரியை வெற்றி பெற்றனர். (23)

# ஆசிரியருக்கான தேசியமட்ட மெய்வன்மைப் போட்டி

ஆசிரியர்களுக்கான தேசியமட்ட மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19, 20,21, 22 ஆம் திகதிகளில் மக்கெய்ஷர் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் மேற்படி போட்டிக்குரிய விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணக் கல்லூரியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது மகாஜனா




(யாழ்ப்பாணம்)

17வயதுப் பிரிவிற்குரிய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இரண்டாம் சுற்றின் இரண்டாவது ஆட்டம் மகாஜனாக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் மகாஜனாக் கல்லூரியின் சுழற்பந்துவீச்சை சமாளிக்கமுடியாமல் யாழ்ப்பாணக் கல்லூரி 73 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி நிசாந்தனின் அரைச்சதத்தின் உதவியுடன் 45 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பிரகாசித்த நிசாந்தன் 47 பந்துகளில் 2 ஆறுகள் 8 நான்குகள் உட்பட 54 ஓட்டங்களைப்பெற்றுக்கொடுத்தார். ஜனந்தன் 35 ஓட்டங்களையும் ரசிகரன் 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரவிவர்மன் 49 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டையும் பிரவிந்த் 17 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டையும் கைப்பற்றினர். 200 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக்கல்லூரி மகாஜனாக் கல்லூரியின் சுழற்பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 36 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் லிங்கராஜ் 17, கீர்த்தனன் 14, விபீஸ் 14 ஓட்டங்களைப்பெற்றனர். பந்துவீச்சில் கஜந்தன் தனது சுழலால் 24 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டையும் பிரசாந்த 13 ஓட்டங்களைக் கொடுத்து 2




விக்கெட்டையும் கைப்பற்றினர். யாழ்ப்பாணக்கல்லூரியை 73 ஓட்டங்களால் வெற்றி கொண்ட மகாஜனாக் கல்லூரி மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றதோடு மூன்றாம் சுற்றில் கின்னியா மத்திய மகா வித்தியாலயத்துடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. (23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விறுவிறுப்பான போட்டியில் தென்னாபிரிக்காவை வென்றது பாக்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக இருபது-20 தொடரின் சுப்பர் 8 சுற்றின் நேற்றைய முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றுள்ளது.

தென்னாபிரிக்க அணிக்கெதிராக நேற்றைய போட்டியில் பாகிஸ்தான் அணி இரண்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸா மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டை 8 ஓட்டங்களுக்கு இழந்த தென்னாபிரிக்க அணி ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக்களையிழந்து 28 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அதன்பின்னர் இணைப்பாட்டங்கள் சிறிதுசிறிதாக பகிரப்பட்டு தென்னாபிரிக்க அணி 133 ஓட்டங்களை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஜே.பி.டுமினி 38 பந்துகளில் 48 ஓட்டங்களையும் ஏ.பி.டி.வில்லியர்ஸ் 18 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.




பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக முகமெட் ஹபீஸ் 4 ஓவர்களில் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் யாசீர் அரபாத் மூன்று ஓவர்களில் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சயிட் அஜ்மல் 4 ஓவர்களில் 26 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் உமர் குல் 2 ஓவர்களில் 19 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

134 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 19.4 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை யிழந்து வெற்றியிலக்கையடைந்தது.

ஆரம்பத்தில் தொடர்ச்சியாக விக்கெட்டுக் களையிழந்த பாகிஸ்தான் அணி ஒரு கட்டத்தில் 7 விக்கெட்டுக்களையிழந்து 76 ஓட்டங்களைப்பெற்று தடுமாறியது எனினும் 8 ஆவது விக்கெட்டுக்காக உமர் குல், உமர் அஜ்மல் இருவரும் 4.3 ஓவர்களில் 46 ஓட்டங்களைப்பகிர பாகிஸ்தான் அணியின் வெற்றியிலக்கு இலகுவானது.

இறுதி 5 பந்துகளில் 9 ஓட்டங்கள் தேவைப்பட்ட போது இறுதி ஓவரின் 2ஆவது பந்தில் உமர் அஜ்மல் 6 ஓட்டமொன்றைப் பெற்றுக் கொள்ள பாகிஸ்தான் அணியின் வெற்றி உறுதியானது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக உமர் அஜ்மல் 41 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும் உமர்குல் 17 பந்துகளில் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக டேல் ஸ்ரெய்ன் 4 ஓவர்களில் 22 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் ரொபின் பீற்றர்சன் 4 ஓவர்களில் 15 ஓட்டங்களிற்கு 2 விக்கெட்டுக்களையும் ஜொஹன் போத்தா, ஜே.பி.டுமினி, ஜக்ஸ் கலிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக பாகிஸ்தான் அணி சார்பாக துடுப்பாட்டத்தில் அதிரடியாக ஆடிய உமர்குல் தெரிவானார்.

## அரையிறுதிப் போட்டி

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ்.தனபாலன் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் 19 வயதிற்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தப்படும் கிரிக்கெட் போட்டியில் இன்றைய அரையிறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மோதவுள்ளது.

இன்னொரு அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாண மத்திய கல்லூரியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி மோதவுள்ளது.

# வோட்சன்; வோர்னர் அதிரடியில் அவுஸ்திரேலிய அபார வெற்றி

வோட்சன், வோர்னர் அதிரடியில் அவுஸ்திரேலியா 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

நான்காவது உலகக்கிண்ண இருபது-20 கிரிக்கெட் போட்டி இம்முறை இலங்கையில் நடைபெற்று வருகின்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் அரங்கில் நேற்றிரவு நடைபெற்ற சுப்பர் 8 போட்டியில் இந்தியா-அவுஸ்திரேலிய அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் மஹேந்திர சிங் தோனி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

இம்முறையும் இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் வீரேந்திர சேவாக் அணியில் சேர்க்கப்படவில்லை. ஆரம்ப வீரர்களாக கௌதம் காம்பீரும், இர்பான் பதானும் களமிறங்கினர்.

இந்திய வீரர்களால் அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சை சமாளித்து அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாமல் போயிருந்தது.

இதன்காரணமாக சீரான இடைவெளியில் இந்திய அணியின் விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டுக்கொண்டே இருந்தது எந்தவொரு வீரரும் நிலைத்து நின்று ஆடமுடியவில்லை.

இறுதியில் இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 140 ஓட்டங்களினை மாத்திரமே எடுத்தது.

அதிகபட்சமாக இர்பான்பதான் 30 பந்துகளில் 31 ஓட்டங்களினையும், சுரேஷ் ரெய்னா 19 பந்துகளில் 26 ஓட்டங்களினையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் ஷேன் வோட்சன் மூன்று விக்கெட்டுக்களையும், கம்மின்ஸ் 2 விக்கெட்டினையும் கைப்பற்றினார்.

141 ஓட்டத்தினை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பமே அதிரடியில் தொடங்கியது.

அவ் அணி சார்பில் ஆரம்ப வீரர்களாக ஷேன் வோட்சனும், டேவிட் வோர்னரும் களமிறங்கினர். இருவருமே இந்திய அணியின் பந்துவீச்சை துவம்சம் செய்து சிக்ஸர் மழை பொழிந்தனர்.

இம்முறை போட்டியில் இந்திய அணித் தலைவர் மகேந்திரசிங் தோனி 5 பந்துவீச்சாளர்களை களமிறக்கியிருந்தார்.

இந்திய அணி சார்பாக 8 பந்துவீச்சாளர்கள் பந்துவீசினார்கள் ஆனால் தோனி வகுத்த வியூகம் எதுவும் கைகூடவில்லை அனைத்துப் பந்துவீச்சாளர்களின் பந்துகளுக்கும் அவுஸ்திரேலிய வீரர்கள் சிக்ஸர் அடித்தார்கள்.

அவுஸ்திரேலிய அணி சார்பாக ஷேன் வோட்சன் 42 பந்துகளில் 7 சிக்ஸர்கள், 2 நான்கு ஓட்டங்கள் உட்பட 72 ஓட்டங்களினையும் டேவிட் வோர்னர் ஆட்டமிழக்காமல் 41 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 7 நான்கு ஓட்டங்கள் உட்பட 63 ஓட்டங்களினையும் பெற்றனர்.

அவுஸ்திரேலிய அணி 14.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டினையிழந்து தனது வெற்றியிலக்கை அடைந்தது. ஆட்டநாயகனாக அவுஸ்திரேலிய அணியின் ஷேன் வோட்சன் தெரிவு செய்யப்பட்டார்.

## ஆஸியில் இருந் ...

படுவதை விட இலங்கை திரும்புவதையே விரும்பினர்.

பசுபிக் தீவான நவுறுக்கு அனுப்பி விசாரிக்கும் முறையை அரசாங்கம் கொண்டு வந்த பின்னும், புகலிடக் கோரிக்கையாளர்களுடன் படகுகள் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகாமையில் வருவதாக சிட்னி மோர்னிங் ஹெரால்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வகையில் அண்மைக்காலங் களில் வந்த படகுகளில் ஆகவும் கூடுதலான 195 பயணிகளை ஏற்றிய படகொன்றுக்கு உதவி வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 13இன் பின், 3200க்கு மேற்பட்ட புகலிடம் கோருவோர் வந்துள்ளதாகவும் இவர்கள், நவுறு மற்றும் பப்புவா நியூகினி மனெஸ் தீவுகளில் உள்ள முகாம்களின் கொள்ளளவிலும் கூடுதலாக இருந்தனர் எனவும் கூறப்பட்டுள்ளது. (எ-11)

## வரவு செலவுத் திட்ட...

அரசாங்கத்தின் 2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின்படி மொத்தச் செலவீனம் 2ஆயிரத்து 520 பில்லியன் ரூபாய் எனவும் மொத்த வருமானம் 1280 பில்லியன் ரூபாய் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தின் முன்கூட்டிய ஒதுக்கீட்டு நிதியை கடந்த 26ஆம் திகதி இரவு கூடிய அமைச்சரவை அங்கீகரித்தது. ஜனாதிபதியும் திறைசேரியும் சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் தரப்பினருடன் தனித்தனியாக கலந்தாலோசித்து இந்த வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சரவையில் சமர்ப்பித்தார். இதன்படி 2013இல் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7 வீதமாகவும் பணவீக்கம் 7 வீதமாகவும் நிலை நிறுத்தப்படும்.

அரசாங்கத்தின் மொத்தவருமானம் 20 பில்லியன் ரூபாய் வெளிநாட்டு உதவிகள் அடங்கலாக ஆயிரத்து 280 பில்லியன் ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் எதிர்வரும் ஒக்டோபர் 9 ஆம் திகதி வரவு செலவுத்திட்டத்தின் முதலாம் வாசிப்பு நாடாளுமன்றத்தில் இடம்பெறும். வரவு செலவுத்திட்டம் நவம்பர் 8ஆம் திகதி சமர்பிக்கப்படும்.

இதில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு 290 பில்லியன் (29ஆயிரம் கோடி) ரூபாய்க்கு அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீடுகளில் பெரும்பகுதியை பாதுகாப்பு அமைச்சே விழுங்கிவருகிறது.

போர் முடிவுக்குவந்தபின்னரும் பாதுகாப்பு அமைச்சுக்கான செலவீனங்களை அரசாங்கம் குறைத்துக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மனித உரிமைப் பிரச்சினை ...

அரசாங்கத்தின் தீவிர கவனயீனத்தை காட்டுகிறது என்றும் நெருக்கடிகளுக்கான குழு குற்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

போர்க் குற்றங்கள் தொடர்பில் அரசாங்கம் இன்னமும் விசாரணைகளை மேற்கொள்ளவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் சம்பந்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் படையினரின் மீறல்கள் உள்ளிட்ட விடயங்களை விசாரணை செய்ய இன்னும் சுயாதீனமான அமைப்பு ஒன்று நிறுவப்படவில்லை.

இதற்கு மத்தியில் கடந்த 6 மாதங்களுக்குள் இலங்கையில் காணாமல் போதல் உட்பட்ட மனித உரிமைமீறல் விடயங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

வடக்கு கிழக்கில் இராணுவப் பிரசன்னத்தை குறைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக இன்னும் அங்கு படையினர் பொதுமக்களின் நிர்வாகங்களில் தலையிடும் போக்கு அதிகரித்து வருகிறது.

வடக்கில் மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படவில்லை. இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த பின்னடித்து வருகின்றது.

எனவே ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பிரதிநிதிகள், இலங்கையின் நல்லிணக்க திட்டங்களுக்கு வலியுறுத்தல் விடுக்காமல் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வலியுறுத்தலை விடுக்க வேண்டும் என்று நெருக்கடிகளுக்கான குழு கோரியுள்ளது.

இந்த நிலையில், இலங்கையின் மனித உரிமைகள் நிலைவர மேம்பாட்டை கவனிப்பதற்காக ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதிகளை இலங்கை அனுமதிக்க வேண்டும்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக மேலதிகப் பிரதிநிதிகள் இலங்கை நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையின் நடைமுறையை கவனிக்க அனுப்பப்பட வேண்டும் போன்ற செயற்பாடுகளை தற்போது கூடியுள்ள மனித உரிமைப் பிரதிநிதிகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் நெருக்கடிகளுக்கான குழு கோரியுள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய போட்டிகள்

இங்கிலாந்து-நியூசிலாந்து
பி.ப3.30 மணி - பல்லேகல

இலங்கை-மே.தீவுகள்
பி.ப. 7.30 மணி பல்லேகல

## நீதிமன்ற விடயத்தில்...

நீதிமன்றம் சுயாதீனமாக இயங்குகின்றது என்பதனை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். சட்டத்தரணி என்ற ரீதியில் நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத் தன்மை க்கு குந்தகம் ஏற்பட அனுமதிக்கப் போவதில்லை.

முன்னாள் பிரதம நீதியரசர்கள், தற்போதைய நீதியரசர் ஆகியோருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் சேறு பூசியபோது நானே அவர்களுக்காக குரல் கொடுத்தேன்.

நீதிமன்றத்தின் சுயாதீன தன்மைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் செய்தி ஆசிரியர்களுடன் நடைபெற்ற சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.(எ-11)

## தமிழர்களைச் சுட்ட...

செய்யப்பட்டுள்ளது.

இது தற்செயலான ஒன்றல்ல. முக்கிய மான கருமம் ஒன்றுக்காக கைவிடப்பட்ட பயணமும் அல்ல. இது ஒரு அரசியல் முடிபு.

அனைத்துலக சமூகத்தின் மத்தியில் தமிழர் தேசத்திற்கு இழைத்த கொடுமைகள் குறித்து கேள்விக்குள்ளாக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்பட்ட ஒரு முடிபு.

ராஜபக்ஷவுக்கு எதிரான போராட்டம் ஒரு தனி மனிதனுக்கு எதிரான போராட்டமல்ல. வெறும் உணர்ச்சிமயப்பட்டு மேற்கொள்ளப் படுமொன்றுமல்ல. இது அரசுக்கு எதிரான போராட்டம். ராஜபக்ஷவுக்கு எதிரான போராட்டம் ஓர் அரசியல் இலக்குக் கொண்டது.

அரசுக்குச் சார்பாக இருக்கும் அனைத்துலக நாடுகள் தமது வெளியுறவுக் கொள்கைகளைமீளபரிசீலனை செய்யவும் அதில் மாற்றங்களை ஏற்படுத்தக் கோரும் முனைப்புக் கொண்டது என்றுள்ளது. (எ-11)

## கற்கைவிடுப்பில் பல்கலைக்கழகத்தில் கற்போர் உடனடியாக கடமைக்குத் திரும்பவேண்டும்

(யாழ்ப்பாணம்)

கற்கை விடுமுறையில் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்புகளை மேற்கொள்ளும் ஆசிரியர்கள், கல்வி அலுவலர்கள் உடனடியாக தத்தம் பாடசாலைகள் மற்றும் கல்வித் திணைக்களங்களில் கடமையை பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் பல்கலைக்கழகங்களில் முழுநேரப்பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முழுநேர முது கல்விமாணி ஆகிய கற்கைநெறிகளை மேற்கொள்பவர்கள் தத்தம் பாடசாலைகள் மற்றும் கல்வி அலுவலகங்களில் கடமையைப் பொறுப்பேற்க வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இதேவேளை, முழுநேர கற்கை விடுப்பில் பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழிப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுக்கும் இவ்வறிவித்தல் ஏற்புடையதாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நீண்ட நாட்களாக பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் கல்வி அமைச்சு இந்த முடிபை எடுத்துள்ளதாக அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். (ந)

## புலிகள் மீதான தடை...

வருகின்றது.

இந்த நிலையில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடித்து வருவதற்கு மதிமுக பொதுச் செயலாளர் வைகோ எதிர்ப்புத் தெரிவித்து வந்த நிலையில், இது குறித்த தீர்ப்பாயத்தில் முறையிட்டார்.

ஆனால் தீர்ப்பாயமோ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீட்டித்து உத்தரவிட்டது. இதையடுத்து வைகோ, சென்னை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார்.

அந்த வழக்கும் இன்னமும் நிலுவையில் உள்ள நிலையில் நீதிபதி வி.கே.ஜெயின் தலைமையிலான தீர்ப்பாயம் நேற்று சென்னையில் கூடியது. இதில் விடுதலைப்புலிகள் மீதான தடை குறித்து ஆட்சேபம் தெரிவிப்பவர்கள் தெரிவிக்கலாம் என்றும் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

அதன்படி சென்னை எம்.ஆர்.பி நகரில் உள்ள இமேஜ் அரங்கில் நீதிபதி வி.கே.ஜெயின் தலைமையிலான தீர்ப்பாயம் கூடியது. வைகோ இந்த தீர்ப்பாயம் முன்பு ஆஜராகி தனது ஆட்சேபத்தை தெரிவித்துள்ளார். (எ-11)

## மீண்டும் டெசோ ...

அக்கூட்டத்தை கருணாநிதி கூட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த டெசோ மாநாட்டில் ஈழத் தமிழருக்கான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மீண்டும் ஒரு டெசோ மாநாடு ஏன் எதற்காக என்பது இன்னமும் அறிவிக்கவில்லை. (எ-11)

## இலங்கை அரசாங்கத் ...

செயற்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதன்முதல்கட்டமாக வடக்கில் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

வட மாகாணத்தின் தேர்தலுக்கான அறிவிப்பு, அரசியல் தீர்வுக்கான பாதையின் ஆரம்பமாக அமையும் என்றும் த ஹிந்து சுட்டிக்காட்டியுள்ளது. (எ-11)

## பல்கலைக்கழக பேரணிகள் ...

தேசிய உற்பத்தியிலிருந்து 6 வீதத்தை நாட்டின் கல்வித்துறைக்கு ஒதுக்குமாறும் பல்கலைக்கழகங்களுக்குள் நேரடி அரசியல் தலையீட்டை ஒழிக்குமாறும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்க்குமாறும் இன்னபல கோரிக்கைகளை வலியுறுத்தியும் இந்த இரண்டு பேரணிகளும் நடத்தப்பட்டன.

அரசுக்கும் விரிவுரையாளர்களுக்கும் இடையில் பல சுற்றுக்களாக நடந்த பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்காத பின்னணியில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அரசின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட் டுள்ள நாட்டின் கல்வித்துறையை பாதுகாக்க வேண்டும் என்ற தொனிப்பொருளில் பல்கலைக்கழக மாணவர்களும் விரிவுரையாளர்களின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

ஊர்வலமாக வந்து, கொழும்பு லிப்டன் சுற்றுவட்டம் பகுதியில் நடந்த பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அங்கிருந்து ஹைட் பார்க் மைதானத்தை நோக்கிச் சென்று அங்கு நடந்த இறுதிக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஊர்வலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினர், மக்கள் விடுதலை முன்னணியினர் மற்றும் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என பெருமளவிலான அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டார்கள். (எ-11)


விசா ஆலோசனைத்துறையின்
ஆச்சரியமான முன்மாதிரியான நிகழ்வு
விசா ஆலோசனைப் பணம்
மீளளிக்கப்படுகின்றது...

முற்பணமோ பிற்பணமோ கொடுத்தவர்
கேட்ட கணத்தில் மீளளிப்பு
இதுவே எமது வெற்றியின் தாரக மந்திரம்
விசா ஆலோசனைத்துறையின் கறை படிந்த
வரலாற்றை மாற்றிய மகத்தான மகுட வாசகம்

தமது பிற நாட்டுப் பயணத்திற்காக எமக்கு
திரு.திருமதி சுபராஜ் குடும்பம் அளித்த
ஆலோசனைக் கட்டணம் அவர்களிற்கேற்பட்ட
எதிர்பாராத நிலைமையினால் அவர்களின்
வேண்டுகோளிற்கமைவாக ஊடகங்களின் முன்
அவர்களின் கரங்களிற்கு மீள வழங்கப்படும்
முன்மாதிரியான கைங்கரியம்

(C-1176)

வரலாறு திருத்தி எழுதப்படும் நாள் 30.09.2012 ஞாயிறு காலை 10 மணி
இடம்: ரில்கோ விருந்தினர் விடுதி
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
THISAIKADDI (PVT)LTD
Regd No: pv82703
'முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016





பிரெஞ்சு மொழிக் கற்கைக்கு
யாழில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு உத்தியோகபூர்வ FRENCH நிறுவனம்

ALLIANCE FRANCAISE DE JAFFNA
யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
The Only Official Centre for French Language in Jaffna
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
Learn French The French Way

❋ France இன் Paris நகரில் உள்ள தலைமை நிறுவனமாகிய "Alliance Francaise de Paris" ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு உத்தியோகபூர்வ பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் "Alliance Francaise de Jaffna" மட்டுமே.

❋ உலகில் 136 நாடுகளில் 1040 Alliances Francaises உள்ளன. இலங்கையில் KOTTE, KANDY, JAFFNA, MATARA ஆகிய இடங்களில் மாத்திரமே உள்ளன. (France Embassy Website-*www.ambafrance-lk.org)*

❋ சர்வதேச தரம் வாய்ந்த இந்நிறுவனத்தில் France/மற்றும் French பேசப்படும் நாடுகளுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.

✦ ஒவ்வொருவரிடமும் Listening, speaking, reading & writing ஆகிய திறமைகள் சோதிக்கப் படுகின்றன.

✦ 6 மாத கற்கைநெறியின் (BASICS 100 HOURS) முடிவில் பரீட்சை நடாத்தப்பட்டு தரமான CERTIFICATE வழங்கப்படுகின்றது. 6 மாதத்தினை பூர்த்தி செய்ய முடியாவிட்டால் கடிதம் ஒன்றை பெற்றுக் கொள்ளலாம்.

✦ அதன் பின்னர் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஐரோப்பிய பரீட்சைகளான DELF, DALF பரீட்சைகளுக்கு குறைந்த கட்டணத்தில் எமது நிறுவனத்தினூடாக மட்டுமே அனுமதிகளை பெற முடியும்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.....

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

(512)

வடமாகாணத்தில் தனியொரு முகவரி:

61,Kachcheri- Nallur Road, Jaffna. TP No:- 021 222 8093/ நேரில் வரலாம்.

*E-mail: alliancejaffna@yahoo.com*

(முத்திரைச் சந்தி – கச்சேரி- நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடம்)



Dubái நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

(Ras - AL Kaima Company Dubai)

அதியுயர் சம்பளத்துடன் Ceramic Packing வேலை செய்வதற்கு உடனடியாக துடிப்புள்ள வேலையாட்கள் தேவை. வடபுல நண்பர்களே! அதி உயர் சம்பளத்துடன் நீங்களும் வெளிநாடு சென்றுவர அரிய சந்தர்ப்பம். (சாப்பாடு+தங்குமிடம், மருத்துவம் இலவசம்) இரண்டே வாரத்தில் பயணம் (Country - Dubai) (Work - Ceramic Packing) (Age Limite - 22 - 40)

விரையுங்கள்
LANKA VOICE, 24 Station Road, Vavuniya
0750650084
(C-1158)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.